பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

அந்தியகால சேவைக்கு
உங்கள் அருகிலேயே
இருக்கும் அன்பன்!
"நேசன்ஸ்"

★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ லர் வகையங்கள்
★ எம்பாமிங்

நேசன்ஸ்
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை
ரூ 3/50

NESON'S
Funeral Undertakers
FLORIST
CASKETS EMBALMING
FUNERAL COACHES
No. 563, Hospital Road,
Vembadi Junction, Jaffna.

கடர்: 5 சுக்கில ஷுல தை மீ 24 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 09 (06 - 02 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 2

சுதுமலையில் விரைவில் புலிகளின் முதற் கூட்டம்

பிரபாகரனும் பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 6

வடபகுதியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முதலாவது பிரசாரக்கூட்டம் சுதுமலையில் விரைவில் நடைபெறும் எனத் தெரியவருகிறது.

இந்தக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அல்லது விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. பாத்தயா அல்லது இருவருமே பங்குபற்றுவார்கள் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் மிகவிரைவில் மக்கள் முன் தோன்றுவார் என்பதை கொழும்பில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி உறுதி செய்தார்.

இந்தியப் படை விலகலைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், திருகோணமலை தவிர்ந்த தமிழ் மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, தமது நிகழ்ச்சிப்பாட்டை மக்களுக்கு விளக்கும் வண்ணம் பொதுக் கூட்டங்களை நடத்தி வருகிறது.

இந்தக் கூட்டங்களுக்குச் சிகரம் வைத்தாற்போல யாழ்ப்பாண மாவட்டத்தில், சுதுமலையில் மிகப் பிரதான, பிரமாண்டமான பொதுக் கூட்டமொன்றை நடத்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முடிவு செய்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் கலந்து கொண்டு பிரதான உரை நிகழ்த்துவார் என அறியவந்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினதான, சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்வுகள் சுதுமலை அம்மன் கோவிலில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகு முன்னர், திரு பிரபாகரன், 23-7-1987 அன்று சுதுமலை அம்மன் (8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

தொலைபேசி டிபார்ட்மெண்டுக்கு தொலைவை கொடுக்கிறது என்று முடிவு செய்திட்டினம் போலை.....!

சுபநேரம்

6-2-1990
லத-24
சுபநேரம்: 11-05 முதல் 12-35 வரை ராகுகாலம் 3-35 முதல் 5-05 வரை.

காணிப் பதிவகத்தில் இருந்த 8,000 பிரதிகள் நனைந்து நாசம்!

யாழ்ப்பாணம், பெப் 6

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 8 ஆயிரம் காணிப் பதிவுப் பிரதிகள் அழிந்தபோய்விட்டன!

இந்தத் திடுக்கிடும் தகவலை யாழ் மாவட்டக் காணிப் பதிவக உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட பதிவுகளின் பிரதிகள் கொழும்பிலும் இல்லை. அதனால் காணி உறுதிகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவது எப்படி என்ற பெரும் பிரச்சினை எழுந்திருக்கிறது.

இது சம்பந்தமாக முடிவுக்கு வரமுடியாத நிலையில், மாவட்டக் காணிப் பதிவக அதிகாரிகள், சட்டமா அதிபரின் உதவியை நாடியுள்ளார்கள்.

500 காணிமற் போயின!!

1940 ஆம் ஆண்டுக்கு முன் எழுதப்பட்ட காணி உறுதிகளின் பதிவுகளில் 8 ஆயிரமே அழிந்து போயுள்ளன.

இவை யாழ் நீதிமன்றத்துக்கு அருகில் காணிப் பதிவகம் இயங்கியபோது அங்கு வைக்கப்பட்டவை ஆகும். அவை இருந்து பழைய பூங்காவுக்கு அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்டபோது எடுத்துச்செல்லப்படாதவை

வக்செயல்கள் காரணமாக நீதிமன்றத்துக்கு அருகில் இயங்கிய அலுவலகம் சேதமடைந்தது. கூரைகள் உடைந்தன. மழை காலத்தில் நீர் உள்ளே சென்று பிரதிகளை நனைத்து அழித்துவிட்டன. பிரதிகள் வைக்கப்பட்டிருந்த "ராக்கை"கள் கூட மிஞ்சவில்லை.

நீண்ட காலமாக காணிப் பதிவகம் இயங்கவில்லை. அதனால் ஊழியர் எவரும் பழைய அலுவலகம் சென்று என்ன நடந்தது என்று கூடப் பார்க்க முடியவில்லை.

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் காணிப் பதிவகம் (8 ஆம் பக்கம் பார்க்க)

திடுக்கிடும் தகவல்

வடக்கு, கிழக்கில் மீண்டும் கோமாரி பரவும் ஆபத்து!

யாழ்ப்பாணம், பெப் 6

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு கோமாரி நோய் மீண்டும் பரவ ஆரம்பித்திருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கு எதிரான தடை ஊசி கால்நடைகளுக்கு அதாவது இடைவெளியில் முன்று தடவை ஏற்றப்பட்டால் மட்டுமே நோயை பூரணமாக கட்டுப்படுத்த முடியும். ஆனால் இந்த நடைமுறை இந்த வகைக்கொள்ளப்படவில்லை. இன்று பொதுவாக இந்த ஊசி ஒரு தடவையின் பின் போடப்படவில்லை. இதனால் தற்போது கோமாரி நோய் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது.

இதன் அடுத்த 2 ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தற்போது முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. (8 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு

இரு ஆண்டுகளாக கிடைக்காத அதிகாரத்தை இரண்டு மாதங்களில் பெற்றுவிட முடியுமா?

திருச்சி, பெப். 6

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு இரு ஆண்டுகளாகக்

கிடைக்காத அதிகாரத்தை இரு மாதங்களில் பெற்றுவிட முடியுமா?

தமிழ்நாடு முதல்வர் திரு.

முதல்வர் கருணாநிதிகேள்வி

மு. கருணாநிதி செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஆலோசிக்க தமிழக முதலமைச்சர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அன்னையின் சென்னையில் நடந்த பொதுக்கூட்டம் நடுவில் பேசுகையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அது பற்றி செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கருணாநிதி கருத்து வெளியிட்டார்.

திரு. கருணாநிதி சொன்னதாவது:

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ராஜீவ் காந்தி எத்தனை தடவை சர்வகட்சி மாநாடு நடத்தியிருக்கிறார்! அப்படி எதுவும் கூட்டியதாக எனக்குத் தெரியவில்லை. அதற்கு என்னைப் போன்று தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கட்சித் தலைவர்களையும் குறிப்பாக இந்தப் பிரச்சினையில் அக்கறை கொண்ட தலைவர்களையும் அழைத்ததாகத் தெரியவில்லை.

வடக்கு கிழக்கு மாகாண (8 ஆம் பக்கம் பார்க்க)

500 இலங்கை இந்தியாவில் மாணவருக்கு கல்வி வசதி

இந்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் 500 இலங்கை மாணவரை சேர்த்துக்கொள்ள புதுடில்லி அரசு முடிவு செய்திருக்கிறது.

இத்தகவலை இந்தியப் பல்கலைக்கழக மானியக் கமிஷன் தலைவர் திரு. யஷ்பால் வெளியிட்டார்.

இலங்கை மாணவரின் கல்வி மற்றும் வசதிகளைச் செய்து கொடுக்க 4 கோடி 50 லட்சம் ரூபாவை இந்திய அரசு செலவு செய்யவிருக்கிறது.

அண்டை நாட்டுடன் நட்புறவை வளர்க்கும் திட்டம் இது என்றும் திரு. யஷ்பால் சொன்னார். (உ-எ)

நகரப் பகுதியில் மீண்டும் தொலைபேசி கம்பித் திருட்டு

யாழ்ப்பாணம், பெப் 6

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் தொலைபேசி கம்பித் திருட்டு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கைத் தொலைத் தொடர்பு திணைக்களத்தினரும் யாழ் நகரை அண்டிய பகுதிகளில் 100 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தொலைபேசி இணைப்புகளின் கம்பிகளையே சிலர் (8 ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசனில் மோதலில் ஒருவர் பலி! ஒருவர் காயம்!!

யாழ்ப்பாணம் பெப் 6

காங்கேசன்துறை பகுதியில் நேற்று காலையில் 8.30 மணியளவில் துப்பாக்கி மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

மோதலில் இடையில் அகப்பட்டதால் பொது மக்களில் ஒருவர் பலியானார் இன்னொருவர் காயமடைந்தார்.

யாழ். காங்கேசன் வீதியில் உள்ள இராஜநாயகி நியேயே டருக்கு அண்மையிலேயே இந்த மோதல் சம்பவம் இடம் பெற்றது.

'எல்வ்' வாகனமொன்றில் வந்த இளைஞர் குழு ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் போது இடையில் சிக்கி காங்கேசன் துறையைச் சேர்ந்த ரி. விஜயகுமார் (30 வயது) என்பவர் உயிரிழந்தார். அப்பகுதியில் கடை ஒன்றில் விற்பனையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த போது அவர் குண்டுக்கு இலக்காகியதாகக் கூறப்பட்டது. (8 ஆம் பக்கம் பார்க்க)

தெற்கில் தொடர்ந்து வன்செயல்கள்

கொழும்பு, பெப் 6

காலியில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பேர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இராணுவ கோப்ரல் ஒருவரின் 3 சகோதரர்களும் ஒரு சகோதரியும் இறந்தவர்களில் அடங்குவர்.

அனுராதபுரத்தில் இரண்டு பேரின் எரிந்த சடலங்கள் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டன.

வெள்ளவாயாவில் நேற்று முன்தினம் அதிரடிப்படையினர் நடத்திய தேடுதலின் போது ஐந்து தீவிரவாதிகள் கட்டுக்கொல்லப்பட்டனர். (உ-எ)

காணிப்பதிவு பிரதி பெறலாம்

யாழ்ப்பாணம், பெப். 6

காணிப்பதிவுப் புத்தகங்களில் இருந்து கருத்துப் பிரதிகள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்கப்பட்டு வருகின்றன என்று காணிப்பதிவக அதிகாரி தெரிவித்தார்.

வங்கிக்கடன் போன்றவற்றுக்கு உதவும் வகையில் இந்த சுருக்கப்பிரதிகள் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தளபாடப் பற்றுக்குறை, இடவசதியின்மை ஆகியவற்றால் ஊழியர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

செய்திச் சாரம்

பார்வையாளராக புலிகளின் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், பெப்.6

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவிருக்கும் சர்வகட்சி மாநாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வார்கள்எனக் கொழும்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இன்னுர் அமைதியின்மை மற்றும் விவகாரங்கள்தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையைநேற்று விவாதிக்கவேஇருந்த மாநாட்டை நடத்த ஜனாதிபதி பிரேமதாசா தீர்மானித்திருக்கிறார். (உ-எ)

மினிபஸ் சேவைஇல்லை

யாழ்ப்பாணம், பெப் 6

நேற்று வடமராட்சிப் பகுதிக்கும் யாழ் நகருக்கும் இடையேயான தனியார் மினிபஸ் போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை.

வடமராட்சி மினிபஸ் போக்குவரத்துச் சங்கத்தினர் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்ததன் காரணமாகவே மினிபஸ் போக்குவரத்துச்சேவைகள் நடைபெறவில்லை எனச் சொல்லப்பட்டது. (அ-9)

ஒரே குடும்பத்தில் நால்வர் கொலை

அனுராதபுரத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரை தென்பகுதித் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வயோதிபரையும் அவரது இரு பிள்ளைகளையும், மருமகளையும் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். (உ)

இன்று முடிவு

ஜனாதிபதி பிரேமதாஸா கூட்டியுள்ள சர்வகட்சி மாநாட்டில் பங்குகொள்வதா இல்லையா என்பது குறித்து இடதுசாரிக் கட்சிகள் இன்று கூடி முடிவு செய்யும் எனத் தெரியவருகிறது.

இடதுசாரிக்கட்சிகள் நேற்று இதுதொடர்பாகக் கூடி ஆராய்ந்தன; எனினும் நேற்றைய கூட்டத்தில் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. (உ)

நெல்லியடியில் நேற்று ரோந்து

நெல்லியடிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இந்தியப் படையினர் நேற்று முன்தினம் முகாமைவிட்டு வெளியேறி ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

நீண்டநாட்களாக முகாமை விட்டு வெளியில் வராத படையினர்—ரோந்துப் பணியில் ஈடுபட்டதை அடுத்து நெல்லியடிப் பகுதியில் மக்கள் மத்தியில் அச்சநிலை காணப்பட்டது.

கொடிகாமம் வீதி வழியாக சாமியன் அரசடிவரை சென்ற படையினர் பின்னர் திரும்பிச் சென்றனர். (அ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பழைய புத்தகங்கள் விற்கப்படும் வாங்கப்படும் Second Hand Book House' 13/6, ஸ்ரான்லி வீதி, (இலங்கை வங்கி, முரசொலிக்கு முன் வைத்திலிங்கம் மரக்காலை லேன்) யாழ்ப்பாணம். [2431]

கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(R. I. R) தவிச் கெப்பு, கறி புசேவல், பேடு (பிலிமத்) கறுப்புபுள்ளி சேவல் (Dekalb) பிறவுன் சேவல் பேடு (Cobb) புரொயிலர் குஞ்சுகள் குறைந்த விலைக்கு 7 2 90 புதன்கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவுசெய்க: இல: 9 சந்தையா லேன், சுன்னாகம் (புலையிரத நிலையத்துக்கு அருகில்) [2433]

விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள மின்பொருள் விற்பனை நிலையத்திற்கு ஆற்றல் மிக்க விற்பனையாளர்கள் தேவை. முன் அனுபவமும் ஆங்கில அறிவும் உயர்தர கணிதமும் தேவை. வயதெல்லை 20-35 இடைப்பட்டவர்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி. நியூரோன் எலக்ரிக்கல்ஸ், 141 143. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/3779)

தேவை

உருக்கு அலுமாரி வேலை செய்வதில் திறமையும் அனுபவமும் கொண்ட வேலை ஆட்கள் தேவை. நேரில் வரவும். பரஸ்மோ எஞ்சினியரிங் வேக்ஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர். (2232)

வகுப்புகள்

ஆரம்ப பிரெஞ்சு மொழி வகுப்பும், பரதம், பாட்டு, மிருதங்கம், ஓவிய வகுப்புகளும் தைப்பூசநாள் 8-02-90 வியாழக்கிழமை மாலை 3 00 மணிக்கு ஆரம்பமாகின்றன தொடர்பு: யாழ் பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம் Alliance Francaise de Jaffna 130, 1 ஆம் குறுக்கு வீதி யாழ்ப்பாணம். [C/3718]

Spoken English

புதிய தொடர் வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 6 7/30 மணி ஆரம்பம் 12-2 90 S B Iyar 12, வைமன் வீதி நல்லூர். (2234)

Toefl வகுப்புகள்

சனி ஞாயிறு நாட்களில் காலை 8 30 10 மணி S. B Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (2235)

கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்களுக் ஆங்கிலம் சிறுவர்களிலிருந்து அரசாங்க உத்தியோகத்தர் வரை (நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளை மையமாகவைத்து) ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. விபரங்கள் நேரில் எஸ் ஜெயராஜா கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204. மானிப்பாய் ரோட். ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (2437)

தவறிவிட்டது

சேனாதிராசா சண்முகதாஸ் ஆகிய எனது அடையாள அட்டை (7009229101) 3-2-90 அன்று நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். [2243]

TYPEWRITERS

Typewriters - Standard, Portable தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு: சிறந்த முறையில் திருத்தியும் கொடுக்கப்படும். Fudo 39/17 மின்சார நிலைய வீதி, 5ம் ஒழுங்கை (Samy & Co அருகாமையில்) யாழ்ப்பாணம். [சி-3775]

போட்டோஸ்ரற்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் விரைவாக போட்டோ பிரதி செய்து கொள்ள ஸ்ரீ சாந் புத்தகசாலை, 165, மின்சாரநிலைய வீதி, பஸ்நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

ஆங்கில கைநூல்

Practice Makes Perfect Series 1-7 ஆங்கிலத்தில் பேசும் எழுதும் திறமையெற உதவும் கைநூல்கள். தயாரிப்பு S B Iyar கிடைக்குமிடம் 12 (36) வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (2233)

நாடகநூல்

OL தமிழ்மொழி பாடத்திட்டத்தில் வானொலி நாடகமும் உள்ளது. அதைக் கற்பதற்குப் பயன்படக்கூடிய ஒரே நூல் கெட்டிக்காரர்கள் அராலியூர் ந. கந்தரம்பிள்ளை எழுதிய ஒன்பது வானொலி நாடகங்கள் விலை ரூபா 25/- (2239)

வசதியற்ற வீடுகள்

நெடுந்தீவு, செப் 6

நெடுந்தீவு மேற்பகுதியான காராப்பிட்டியில் அமைக்கப்பட்ட வீடுகள் மக்கள் குடியிருக்க ஏற்றதாக இல்லை எனக் கூறப்படுகின்றது. முப்பது வீட்டுத் திட்டத்தின் கீழ் இவை கட்டப்பட்டு வசதியற்ற மக்களுக்கு வழங்கப்பட்டன.

மழைக்காலத்தில் கூரைகள் ஒழியாமையினால் உட்புகுவதுடன் வெள்ளம் அதிகரித்தும் வீட்டிற்குள் சென்று விடுவதாலும் குடியிருப்பாளர்களுக்கு லைகூட வசதிகள் உரியமுறையில்பூர்த்தியாக்கிக் கொள்ளாமையாலும் இந்த வீடுகளில் வசிக்கும் மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். என்று தெரியவருகின்றது. (க-117)

மரணம்

மாதகுளம் செப். 6

புலோலி கதிரவேற்பிள்ளை வீதியைச் சேர்ந்த அருளானந்தம் இராசேந்திரகுமார் (வயது 20) என்பவர் மின்சாரம் தாக்கி மரணமானார். (இ-94)

NEW SCIENCE ACADEMY

In Front of B. M. C.
JAFFNA.

DAY CLASSES

90 A/L

பிரிவு II

ஆரம்பமாகிவிட்டது.

ZOO	— 7.30	—	தங்கராஜா
BOT	— 8.80	—	குணசீலன்
PHY	— 10.30	—	மணியம்
CHE	— 12.30	—	சண்
Pure&App	— 1.30 / 4.30	—	பிரேம்நாத்
ZOO	— 2.30	—	தங்கராஜா

பிரிவு I இதற்கான நேரசூசியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். (சி/3719)

தனியார் துறையில் உள்ள

ஆஸ்பத்திரிகளுக்கு புதிய சட்டங்கள்

கொழும்பு செப் 6

தனியார் ஆஸ்பத்திரிகளின் நிர்வாகத்துக்காக விரைவில் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும்:

நோயாளர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெறும் சகல தனியார் ஆஸ்பத்திரிகளிலும் 24 மணித்தியாலமும் ஒரு டாக்டர் கட்டாயமாக இருக்க வேண்டும்.

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்:

கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் ஆஸ்பத்திரியின் 95 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்றவைபவத்தில் உரை நிழ்த்தும் போது அவர் மேலும் கூறியதாவது-

டாக்டர்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகிறது: இதனைப் போக்கவும் டாக்டர்கள் மூலம் பொருத்தமான சேவையைப் பெறுவதற்கும் டாக்டர்களுக்கான கால அட்டவணை முறை தயாரிக்கப்பட வேண்டும்.

ஆஸ்பத்திரிகளில் இன்று மருந்துகள் வீணாகிறது: இவை பொதுமக்களின் பணமாகும்: இதனைப் பாதுகாக்க வேண்டும் இவ்வாறு அமைச்சர் கூறினார். (க)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

O/L Day Classes (1989)

விஞ — விடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

O/L சனி - ஞாயிறு (90)

வகுப்புக்கள் 9-1-90 ஆரம்பமாகின்றன

10 - 2 - 90 SPOKEN ENGLISH புதிய வகுப்பும் ஆரம்பமாகின்றது

[சி-3761]

கொம்பியூட்டர் கல்வி

Osco Computer Centre

Computer Progrmming & Data processing In Basic Language

சேரும்போது செலுத்தும் தொகை ரூபா. 500/-

காலம்:- 3 மாதம்

இடம்	ஆரம்ப திகதி - நேரம்
1) பருத்தித்துறை (வேலாயுதம் மகாவித்தியாலயம் முன்பாக)	— 7-2-90 - புதன் காலை - 9 மணி
2) வல்வெட்டி, வல்வெட்டித்துறை	— 7-2-90 - புதன் மாலை - 3 மணி

I. B M. (Compatible) இல் பயிற்சி வழங்கப்படும். விரிவுரைகள் தமிழிலும் நடைபெறும்.

(2438)

★ கம்பியூட்டர் கல்வி ★

● **Diploma in Data Processing and Computer Programming in BASIC Language**

ஆரம்பம். 7 - Feb - 90 [திங்கள், புதன், வெள்ளி] நேரம் 12 a.m

10 - Feb - 90 [சனி, ஞாயிறு] நேரம் 9 a.m

● **Dbase III +**

ஆரம்பம்: 15 - Feb - 90 [செவ்வாய், வியாழன், வெள்ளி] நேரம் 9.30 a m

23 - Feb - 90 சனி, ஞாயிறு] நேரம் 10.30 a m

● **Lotus 1 - 2 - 3**

ஆரம்பம்: 11 - Feb - 90 [ஞாயிறு] நேரம் 10 a.m

● **Word Processing**

ஆரம்பம்: 10 - Feb - 90

O/L படித்த இரு பாலாரும் சேரலாம்: மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும்: பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்;

PRACTICALS ON IBM [Compatible Machines]

Join with us to study the latest Computer Technology

UNIKCO COMPUTER CENTRE

No. 5, Power House Road,
2 nd, Lane, JAFFNA.

[சி-3776]

ஓய்வு பெற்றார்

நெடுந்தீவு மத்திய கிராம சேவையாளர் திரு. வ. நடராசா கடந்த மாதம் முதல் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

கடந்த வருடங்களாக கடமையாற்றிய இவர் வல்வெட்டித்துறை நெடுந்தீவு உட்பட பல இடங்களில் பணியாற்றியுள்ளார் இவர் முதலாந்தர கிராம சேவையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-111)

இளைஞர் மன்ற திறப்பு விழா

சாவகச்சேரி, செப் 6

கல்வயல் இந்து இளைஞர் மன்றத்தின் செயலகத் திறப்புவிழா ஸ்ரீ நரசர்மா தலைமையில் நடைபெற்றது:

சங்கீத பூஷணம் சைவப் பெரியார் திரு. சி. விஜயித் தம்பி இதனைத் திறந்துவைத்தார்:

வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி: சிதம்பர நாதக் குருக்கள், பிரதிஷ்டையித்தகர் சிவஸ்ரீ சி: சோமசுந்தரக் குருக்கள் ஆகிய சிவாசாரியர்கள் ஆசி உரைகள் வழங்கினர்:

தென்மராட்சி இந்து இளைஞர் மன்றங்களின் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சு. ஜெகதீஸ்வரக் குருக்களது சிறப்புரையைத் தொடர்ந்து உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. கந்தரம்பிள்ளை, நகராட்சிமன்ற ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா, பண்டிதர் திரு. க. வேலுப்பிள்ளை, இராமசேவையாளர் திரு. வீ. இராசரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். (இ-81)

பிரிவுபசார வைபவம்

வாழ்ப்பாணம் செப் 6

யாழ்ப்பாணம் தொலைபேசி திணைக்களத்தில் மாவட்டப் பரிசோதகராகக் கடமை புரிந்து மட்டக்களப்பு தொலைபேசி திணைக்களத்திற்கு மாற்றலாகிச் செல்லும் ம. முருகசோதிராசாவுக்கு யாழ்ப்பாணம் தொலைபேசி திணைக்களத்தில் பிரிவுபசார வைபவம் நடத்தப்பட்டது:

வைபவம் பிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர் திரு. த. அய்பிகை ராசா தலைமையில் நடைபெற்றது

திருவாளர்கள் து. கிளீட்டஸ், ந. மனிவண்ணன், க. லேந்திரமூர்த்தி, பொ. திலீநாதன், ஐ. முருகையா ஆகியோர் உரையாற்றினர்கள்: (இ)

அறிவித்தல்

ஈழமுரசு பத்திரிகையில் கடமையாற்றிய ஊழியர்கள் தொடர்ந்து கடமையாற்ற விரும்பினால் 12-02-90ல் காலை 9 00 மணிக்கு காரியாலயத்திற்கு வரவும்;

★

பொறுப்பாளர் தேவை

மட்டக்களப்பு, வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள கிளை அலுவலகங்களுக்கு நிர்வாகஸ்தர்கள் தேவை. 12-02-90 காலை 9.00 மணிக்குக் காரியாலயத்திற்கு வரவும்:

★

தேவை

நிருபர்கள் விநியோகஸ்தர்கள், ஒப்புநோக்குனர், அச்சுக்கோர்ப்பாளர்கள், லிகிதர்கள், கட்டெழுத்தாளர்கள் (தமிழ், ஆங்கிலம்) ஆகிய பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்து 12- 02- 90 காலை 9.00 மணிக்கு சான்றிதழ்களுடன் காரியாலயத்திற்கு வரவும்.

31, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்:

(சி/3859)

NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, Jaffna.

90 A/L DAY CLASSES

நடைபெறுகின்றன

PHYSICS	— 09 30	—	ஒளியியல்
	01:00	—	மின்னியல்
CHEMISTRY	— 07:30	—	அசேதன இரசாயனம்
	10:30	—	வெப்ப இரசாயனம்
	03 00	—	சமநிலை
BOTANY	— 08 30	—	தாவர உடற்றொழிலியல்
	11:30	—	உருவவியல்
ZOOLOGY	— 07.30	—	குழியவியல்
	02:00	—	சூழவியல்
PURE & APP MATHS	— 07.80	—	திரிகோணகணிதம்
	08 30	—	காவிகள்
	11:30	—	நுண்கணிதம்
	02 00	—	நீர் நிலையியல்

[எமது வழமையான ஆசிரியர்குழு]

[சி-3737]

NEW SCIENCE ACADEMY

In Front of B. M. C
JAFFNA

PAPER CLASSES

(WEEKEND)

90 A/L

ZOO	— 7.30		தங்கராஜா
CHE	— 8.30		சண்
BOT	— 9.30		செல்வநேசன்
CHE	— 10.30		செல்வரஞ்சன்
PHY	— 11.30		மணியம்
BOT	— 12.30		குணசீலன்
PHY	— 1.30		சோதிலிங்கம்
Pure & App	— 2.30	—	4.30 வெங்கர்

03 02 - 90 ல் ஆரம்பமாகிவிட்டது :

குருக்கள் தேவை

கலட்டி வண்ணார்பண்ணை ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்திற்கு மூன்று நேர நித்திய பூசைகள் செய்வதற்கு குருக்கள் உடன் தேவை.

விபரங்கள் நேரில்.

தொடர்பு:-
இ. பாலசிங்கம் (தலைவர்)
202/ K K. S. வீதி,
கொக்குவில்.

(2430)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

சுறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறஞ்போல நோக்கப் படும்.

பொருள்:

அறத்தோடு பொருந்தாத வறுமை ஒருவனைச் சேர்ந்தால் பெற்ற தாயானும் அவன் அயலானைப் போல் புறக்கணித்துப் பார்க்கப்படுவான்.

உதயன்

இல: 293/3, நாவலர் வீதி, தொலைபேசி 2288
யாழ்ப்பாணம்.
06 - 02 - 1990 த. பெ இலக்கம் 23

கொள்ளிக் கண்ணராகாதீர்!

புனர்வாழ்வு, புனரமைப்புத்துறை அமைச்சின் உயர் தர அதிகாரி ஒருவர் உதயன் மூலம் வெளியிட்டிருக்கும் கவலை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேச மக்களுக்கு புனர்வாழ்வுக்கும், புனரமைப்புக்கும் என நிதி உதவி வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிதி உதவி கோரி, பெரும் எண்ணிக்கையானோர் விண்ணப்பங்களை அனுப்பி உள்ளனர்.

அந்த விண்ணப்பங்களில் சிலவற்றுடன் இணைக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரங்கள் போலியானவை, பொய்யான தகவல்களை உடையவை என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதனால் சகல விண்ணப்பங்களுடனும் இணைக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரங்களை உண்மையானவையா என்று உறுதி செய்ய வேண்டி உள்ளது.

இதன் விளைவாக உதவி நிதியை வழங்குவதில் தாமதம் ஏற்படப் போகிறது. வன்செயல்களால் உண்மையாகவே பாதிக்கப்பட்ட பலரும் நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய அவலநிலை உருவாகி உள்ளது.

இதுவே அந்த உயர் அதிகாரியின் கவலையாகும்.

இந்தத் தகவல் கவலை தருவது மட்டுமன்று; வெட்கப்பட வேண்டிய ஒன்றுமாகும்.

தமிழர்கள் மோசடிகள் செய்வதிலும், சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் கைதேர்ந்தவர்கள் என்ற அவமதிப்பான குற்றச்சாட்டுக்கள், வெளிநாடுகளில் தூவப்பட்டு வருகின்றன. அவற்றுக்குத் தூபம் போட்டு, உறுதிப்படுத்தி, பக்கபலமாக முட்டுக்கொடுப்பது போல இவ்வாறான செயல்கள் அமைந்து விடுகின்றன. இவை கயமரியாதை உள்ள தமிழ் சமூகத்துக்குப் பெரும் அவமானத்தையும், இழுக்கையும் தேடித் தருவனவாக அமைகின்றன.

அரசாங்கப் பணம் என்பதால், தகுதியில்லாதவர்களும் அதனைப் பெறலாம், பெறவேண்டும் என்று எண்ணுவது நியாயமற்றது. சமூக நீதிக்குத் துரோகமானது. ஒரு சிலரின் நியாயமற்ற ஆசை தகுதியானவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது.

அத்தோடு சமூகத்துக்கும் இழுக்கைத் தேடித் தருகிறது. அதன் அந்தஸ்தையும், பெயரையும் கெடுத்து விடுகிறது. இதனை சம்பந்தப்பட்டவர்கள் உணராமல் நடப்பது ஏனோ?

மோசடி செய்தல், பொய்யான தகவல் கொடுத்தல், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுதல் என்பவை இப்போது அரசாங்க உதவி பெறுவதில் மட்டும் என்றில்லை. அவை பலதுறைகளிலும் ஊடுறுத்துப் பரவியுள்ளன.

இவை எங்கள் பிரதேசத்தில் மட்டுமல்ல; சமூகத்தில் மட்டுமல்ல; எல்லா இடங்களிலும் நாடளாவிய, உலகளாவிய ரீதியில் தொற்றியுள்ளன. இன்றைய உலகியல் நடைமுறை வழக்கங்களாகி விட்டன என்று கூடச் சொல்லலாம்.

மனச்சாட்சியையும், மனுநீதியையும் சமூக மதிப்புகளையும் (Social Values) வெட்டி வீழ்த்தும் இந்தச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

ஒவ்வொருவரும் தாம் மனச்சாட்சியுடன் நடக்கப் பழகிக் கொண்டால் மட்டுமே இந்த முற்றுப்புள்ளி சாத்தியமாகும். தமிழர்கள் அதில் முன்னுதாரணமாகத் திகழ்ந்தால் நல்லதல்லவா?

அரசாங்கம் வழங்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு நிதி உதவிகள் தகுதியானவர்களுக்குக் கிடைக்காமல் செய்யும், உள்ளதையும் கெடுக்கும் கொள்ளிக்கண்ணர்களாகத் தமிழர்கள் மாற வேண்டாமே!

மேலும் 30,000 குடும்பங்களுக்கு தொழில் முயற்சிக்கான நிதி உதவி

பதில் அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 6

உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடையை மேலும் முப்பது ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்க நிதி ஒழுங்குபடுத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்- பதில் அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்க வாசகர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

யாழ்- மாவட்டத்தில் இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டு தம் தொழில்களை ஆரம்பிக்கமுடியாது கஷ்டமுறும் குடும்பங்களுக்கு நன்கொடையாக நாலாயிரம் ரூபா வழங்கும் இத்திட்டத்தின் கீழ் கடந்த வருட முடிவுவரை 34 782 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டிருந்தது.

மேலும் முப்பதாயிரம் குடும்பங்களுக்கு இவ்வுதவியை வழங்கவே நிதி உதவி கோரப்பட்டுள்ளது. இப்பணம் கிடைத்தது பெயர்ப் பட்டியல் வங்கிகளுக்கு அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

பிரெஞ்சு தொலைக் காட்சி

யாழ்ப்பாணம், பெப் 6

யாழ்ப்பாண நகரத்தில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலைகள் சம்பந்தமாக பிரெஞ்சு தொலைக்காட்சிச் சேவையினர் படம் எடுத்தனர்.

பிரெஞ்சு தொலைக்காட்சிப் பிரிவின் சார்பில் யாழ்நகர் வந்த கொபின் என்பவரே படம் எடுத்துச் சென்றார். (இ-87)

யாழ் - கொழும்பு

ரயில் மூலம் பொதிகள் எடுத்துச் செல்லும் சேவை

யாழ்ப்பாணம் பெப் 6

யாழ் - கொழும்பு ரயிலில் பொதிகளை எடுத்துச் செல்லும் சேவை கடந்த 1 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சில வருடங்களின் முன் மட்டக்களப்பு - கொழும்பு சேவையில் ஈடுபட்ட ரயிலில் குண்டு ஒன்று வெடித்தது. இதனை அடுத்து ரயில் மூலம் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து பொதிகளை எடுத்துச் செல்லும் நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டிருந்தது.

பொதிகள் தீவிர பரிசோதனையின் பின்னரே ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், யாழ்ப்பாணத்துக்கும் - கொழும்புக்கும் இடையில் உள்ள பகுதிகளுக்கும் பொதிகளை அனுப்பமுடியாது என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ - 9)

வழமை நிலை திரும்பியது

குருநகர், பெப். 6

கடந்த சில தினங்களாக யாழ்நகரின் எல்லைப் பிரதேசமாக விளங்கிய கொக்குவில் பூநாறி மரத்தடி, வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோவிலடிப் பிரதேசம் ஞாயிறு காலை எட்டுமணிக்குப் பின் சகஜ நிலையை அடைந்தது.

கொக்குவிலில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படையினர் காலை 8 மணிக்கு முகாமை விட்டு விலகிச் சென்றனர்.

கடந்த 30 - ஆம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வீடுகளுக்குள் ஊடாக நகரப்பகுதியை நோக்கி வந்த இந்தியப் படையினரை முன்னேற விடாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது அமைதிப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீதியால் சென்ற வாழைப்பழ வியாபாரி ஒருவர் பலியானார்.

அதனைத் தொடர்ந்து ஏவிய ஷெல்கள் சிவப்பிரகாசம் வீதி, வண்ணை - விஸ்வலிங்கப்பிள்ளையார், காளிகோவில் பகுதிகளில் வீழ்ந்ததில் தாயும் இரு பிள்ளைகளும் காயமடைந்தனர். நான்கு வீடுகள் சேதமடைந்தன. ஆடு ஒன்றும் பலியானது.

வண்ணை - மேற்கு காளி கோவிலடியைச் சேர்ந்த திருமதி யோகேந்திரம் செல்வராணி (வயது 23) பிள்ளைகள் ஜெயமாலினி (வயது 2) (வாணி வயது - 1) ஆகியோர் ஷெல் தாக்குதலில் காயமடைந்து யாழ் - அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ - 51)

கைதடி வயோதிபர் விடுதிக்கு மருந்து வகை

யாழ்ப்பாணம், பெப் 6

கைதடி வயோதிபர் விடுதிக்கு ஆறுயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்தியப்பிரிவு கடந்த சனிக்கிழமை அன்பளிப்புச் செய்தது.

வடபிராந்திய முகாமையாளர் திரு எஸ் வேலாயுதபிள்ளை மருந்து வகைகளை கைதடி வயோதிபர் விடுதி அத்தியட்சகரிடம் கையளித்தார்.

இது சம்பந்தமான வைபவத்தில், உப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டிறுவு உப்பளத்திட்ட உற்பத்தி அதிகாரி திரு எஸ். தங்கராஜாவும் சமூகமளித்திருந்தார். (இ-எ)

சமாச கூட்டம்

கொழும்புத்துறை பெப் 6

யாழ். மாநகர சன சமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர் வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று சமாசச் செயலாளர் திரு இ. நவகோபால் அறிவித்துள்ளார்.

கூட்டம் சமாசத்தலைவர் திரு கோ. தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும் இரு பிரதி நிதிகள் வீதம் சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-80)

இலட்சார்ச்சனை

காங்கேசன்துறை பெப் 06

பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் எட்டாம்திகதைப்பூசநாளன்று இலட்சார்ச்சனை பூர்த்தி விழா இடம் பெறும். (இ - 68)

சுதந்திரதின விருதுகள்

கொழும்பு, பெப்: 6

இலங்கையின் 42 ஆவது சுதந்திரதினத்தை ஒட்டி 49 பிரமுகர்களுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா விருதுகளை வழங்கினார்.

தேசமான்ய விருது ஐவருக்கு வழங்கப்பட்டது.

முன்னாள் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் திரு. பி மகாதேவா ஆகியோர் அவர்களில் அடங்குவர்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால அட்டிகல, டாக்டர் நந்த தேவா விஜயசேகர், முதலியார் எம். டபிள்யு. கே. முதலிகே ஏனைய மூவருமாவர்.

பேராசிரியர்கள் சிரில்பொன்னம்பெருமா, டொன் அன்ரனி மைக்கல், டாக்டர்கிங்சுலி பாவா ஆகியோருக்கு வித்யா ஜோதி விருது வழங்கப்பட்டது.

டாக்டர் நிலகரத்தின, டாக்டர் ஆர் சந்தையா ஆகியோருக்கு கலசூரித்தி விருது வழங்கப்பட்டது.

சுதந்திர தின விருதுகளைப் பெறும் ஏனைய தமிழர், முஸ்லிம் பிரமுகர்களின் பெயர்கள் வருமாறு:-

தேசபந்து - முதலாம் வகுப்பு

1. எம். எஸ். செல்லமுத்து கொழும்பு மாநகரசபையின் முன்னாள் மேயர்.

தேசபந்து - இரண்டாம் வகுப்பு

1. ஜனாப் ஆபிஷா ரஷூப், பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர்.

2. ஜனாப் எம். எஸ். கபூர் பத்தி கையாளர்.

3. திரு. ஏ. ஏ. பேதி. கிளேன் [illegible]

ஏனைய பகுதி மக்களுக்கு ஒரு முன் உதாரணம்

புங்குடுதீவு வைபவத்தில் உரை

மச்சிமேப்பள்ளி பெப் 6

இக் கிராம மக்கள் வைத்தியசாலை நலனில் அக்கறை கொண்டு ஒரு இலட்சம் ரூபா செலவில் இக் கட்டிடத்தை நிர்மாணித்தது; ஏனைய பகுதி மக்களுக்கும் ஒரு முன்னுதாரணமாகும்.

புங்குடுதீவு அரசினர்வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட அம்புலன்ஸ் கராஜ் திறப்பு விழா வைபவத்தில் உரையாற்றிய சங்கத் தலைவர் டாக்டர் எஸ். பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், ஊர்ப்பணி அலுவலர் சந்திரானந்தம், டாக்டர் கனேஷ் சிரேஷ்ட தாதி செல்வி எம். கண்ணகை உட்படபலர் உரையாற்றினர். (இ-117)

வேண்டுகோள்

நெடுந்தீவு, பெப் 9

நெடுந்தீவு மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு நெடுந்தீவு குறிகட்டுவான் அரச படகுச் சேவையை தினசரி இரண்டு தடவைகள் நடாத்தக்கோரி நெடுந்தீவு முன்னேற்றக்கழகம், கிழக்கு சனசமூக நிலையம் என்னா யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் பிரதம பொறியியலாளர் ஆகியோரிடம்வேண்டு கோள்விடுத்துள்ளன. (உ-111)

யாழ். பாடசாலைகளில் கட்புல சாதனம் தயாரிப்பு

மானிப்பாய், பெப் 6

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் ஆண்டு 9, 10, 11 வகுப்புக்களுக்கான வணிகவியல் பாடத்திட்டத்துக்கமைய சிறந்த கட்புல சாதனங்களைத் தயாரித்து வருகின்றன.

சிறந்த கட்புல சாதனங்களை தயாரிக்கும் மாணவர்களுக்கும் வணிகவியல் ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்களுடன் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

வணிகவியல் கல்வி அதிகாரி திரு. எஸ். கிருராசாவின் ஏற்பாட்டில் வணிகவியல் சேவைக்கால ஆலோசகர்களும், ஆசிரியர்களும் இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள்.

மானிப்பாய் - காங்கேசன்துறை வட்டார பாடசாலைகளுக்கான கட்புல சாதன போட்டிகளை இம் மாதம் 20 ஆம் திகதி நடத்துவது என நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற வணிகவியல் ஆசிரியர்கள் கூட்டத்தில் இம் முடிவு மேற்கொள்ளப்பட்டு இராமநாதன் கல்லூரியிலேயே போட்டியை நடத்துவதெனக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

மானிப்பாய் - காங்கேசன்துறை வட்டார பாடசாலை வணிக ஆசிரியர்கள் அனைவரையும் கட்புல சாதனங்களை தயாரித்து 20ஆம் திகதி காலை இராமநாதன் கல்லூரியில் போட்டிக்கு கொண்டு வருமாறு திரு. க. கதிரமலை வேண்டியுள்ளார்.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி போன்ற இடங்களில் ஏற்கெனவே இப் போட்டி நடைபெற்று முடிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ- 90)

சிக்கன கடன் உதவு சங்கம்

கொடிகாமம் பெப். 06

மிருசுவிலில் ஜக்கிய சிக்கனக் கடன் உதவுசங்கம் ஒன்று அங்குரார்ப் பணஞ் செய்து வைக்கப்பட்டது.

திரு. நீ. யோசேப் தலைமையில் நடைபெற்றது.

தென்மாராட்சி கிழக்கு வெளிக்கள உத்தியோகத்தர் கலந்து கொண்டார்.

நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது.

கூட்டத்தில் ஜக்கிய நாணய சபை நோக்கங்கள் விளியுறுத்தப்பட்டன.

அவையாவன:

(I) வறியவர்களுக்கு கடன் வழங்குதல்.

(II) வீடமைப்புக் கடன்,

(III படிக்கும் மாணவர்களுக்கான கடன்.

(இ-75)

ஒட்டுசுட்டான் தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம்

ரூ. 12 லட்சம் செலவில்

மாங்குளம் பெப் 6

ஒட்டுசுட்டான் தபாலகத்துக்கான நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கு அரசு 12 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இதே பகுதியில் புதிய உதவி அரசாங்க அதிபர் (உதவி ஆணையாளர்) பணிமனை நிறுவுவதற்கும் உதவி அரசாங்க அதிபர் தலைமை எழுதுவினைஞர் கிற்றூழியர்கள் ஆகியோருக்கான தண்ணீர் மின்சாரம் இணைக்கப்பட்ட விடுதிகளை அமைப்பதற்கும் புனர்வாழ்வு புனரமைப்பு 88 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

மற்றும் ஒளிநொச்சியில் பழச்சாறு உற்பத்தி நிலையம் ஒன்று வடக்கு கிழக்கு மாகாணசபையால் நிறுவப்படவுள்ளது.

இந்த உற்பத்தி நிலையத்துக்கான கனிவளங்களை அயல் மாவட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியுமென்றும் படித்த இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமென்றும் இந்நிலையத்தின் மூலம் ஒரு மணித்தியாலத்துக்கு 1500 லீற்றர் பழச்சாறு உற்பத்தி செய்ய முடியுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பழச்சாறு நிலையத்தை அமைப்பதற்கு மாகாணசபை வெளிநாட்டு உதவி மூலம் 5 இலட்சம் ரூபாவைச் செலவிடவுள்ளது. (இ - 94)

வீதித் திருத்த வேலைகள் மீண்டும் ஆரம்பம்

பருத்தித்துறை, பெப் 6

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளிருந்த வேலைகளுக்கென ஐந்நூறுக்கும் மேற்பட்ட தாற்காலிக ஊழியர்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தாரிப்பிப்பாய்கள் வந்து சேர்ந்தநாள் கடந்த ஆண்டுகளில் இடைநிறுத்திவைக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ 117)

அதிபர் பதவி வெற்றிடம்

கொக்குவில் பெப் 6

பண்டத்தரிப்பு கோட்டக் கல்விப் பிரிவில் உள்ள பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை [illegible] வருகின்றது. (இ-67)

உயிரிழந்தோர் - ஊனமுற்றோர் நிவாரணத்துக்கு ரூ. 1 கோடி

யாழ்ப்பாணம் பெப் 06

கடந்தகால சம்பவங்களினால் உயிரிழந்தோர், ஊனமடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க கடந்த வாரம் 1 கோடி ரூபா கிடைத்துள்ளதாக யாழ் - பதில் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் உதயனுக்கு தெரிவித்தார்.

இம்மாத இறுதிக்குள் 200 பேருக்கு காசோலைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

வேதனம் இம் மாதம்

கொடிகாமம் பெப் 06

புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 1989 டிசம்பர் 1990 ஜனவரிக்கு உரியவேதனம் இம்மாதம் வழங்கப்படலாம் என்று நம்பப்படுகிறது. (இ - 75)

முதல் கட்டமாக 128 பேருக்கு நேற்றுத் திங்கட்கிழமை அரசாங்க செயலகத்தில் வைத்து காசோலைகள் வழங்கப் பட்டுள்ளன. (இ - 3)

யாழ் மாவட்ட உடற்பயிற்சி போட்டிகள் மார்ச் 15இல்

மானிப்பாய் பெப் 6

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் மாவட்ட உடற்பயிற்சிப்போட்டி மார்ச் 15ஆம் திகதி நடைபெறும். உடற்கல்வி கல்வி அதிகாரி திரு. த. அருணகிரிராசா இதனை அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண கோட்ட மட்டப்போட்டிகள் மார்ச் 2 ஆம் திகதியும் மருதனாமடம் கோட்ட மட்டப்போட்டிகள் மார்ச் 5ஆம் திகதியும், வேலணைக் கோட்ட மட்டப் போட்டிகள் மார்ச் 6 ஆம் திகதியும், வண்டத்தரிப்பு கோட்ட மட்டப் போட்டிகள் மார்ச் 7ஆம் திகதியும், வடமராட்சி கோட்ட மட்டப்போட்டிகள் மார்ச் 9ஆம் திகதியும் நடைபெறும்.

கொத்தணி மட்டத்திலான மெய்வல்லுனர் போட்டிகள் மார்ச் 1ஆம் திகதிக்கு முன்பதாகவும், கோட்ட மட்டத்திலான போட்டிகள் மார்ச் 16 ஆம் திகதிக்கு முன்பதாகவும் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (இ - 90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984 டிசம்பரில் இடம்பெயர்ந்த

1300 தமிழ் குடும்பங்கள் மீண்டும் வெலிஓயா திரும்பும்

யாழ்ப்பாணம், பெப். 6

வெலிஓயா பிரதேசத்தில் இருந்து கடந்த ஆறு வருடங்களுக்கு முன் இடம் பெயர்ந்த சுடும்பங்களில் 1300 குடும்பங்கள் முதல்கட்டமாக எதிர்வரும் ஏழாம் திகதி மீண்டும் அந்த இடங்களில் குடியேறவுள்ளன.

கொக்கிளாய், நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, தென்னை மரவாடி ஆகிய பகுதிகளில் இருந்து 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதியளவில் வெளியேற்றப் பட்டன.

இக்குடும்பங்கள் தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு, ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகள், கோவில்கள் வாசிகசாலைகள் ஆகியவற்றில் அகதிகளாகத் தஞ்சம்புகுந்தன.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து இக் குடும்பங்கள் மீளக்குடியேற்றப்படுகின்றன.

7ஆம் திகதியன்று முதற் கட்டமாக 1,300 குடும்பங்கள் குடியேறவிருக்கின்றன. முதலில் அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த குடும்பத்தலைவர்கள் மட்டும் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குச் செல்வார்கள்.

தொடர்ந்து மற்றைய குடும்ப அங்கத்தவர்களும் கட்டம் கட்டமாக அங்கு சென்று குடியேறுவார்கள்.

அவர்களுக்குத்தேவையான உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் இரு வாகனங்கள் நேற்று அங்கு புறப்பட ஏற்பாடாகியிருந்தது.

ஒரு வாகனம் அங்கு தரித்து நின்று அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கும் என செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மற்றும் பல சமூக அமைப்புக்களும் குடியேறும் மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க முன் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

கடமை உணர்வுடன் அதிகாரிகள் செயற்படுவார்கள்

பயிலுனர் ஆசிரியர் நேர்முகப்பரீட்சை குறித்து பணிப்பாளர் நம்பிக்கை

நடைபெறவுள்ள ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சையில் கடமைபுரிய என்னால் நியமிக்கப்பட்ட சகல அதிகாரிகளும் எனது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் தமது கடமையை மிக நேர்மையாகவும், கண்ணியத்துடனும் அவர்கள் ஆற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நேற்று ஆரம்பமான பயிலுநர் ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சையாளர்களாக கலந்து கொள்ளும் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி மேற்கண்டவாறு கூறினார்.

உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலிருந்து பங்கு கொள்ளும் அதிகாரிகள் உள்ளடங்கிய நேர்முகப் பரீட்சகர்களது அறிவுறுத்தல் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:

கடந்த காலங்களில் ஆசிரிய நியமனங்களைப் பெற்றவர்களில் 60 சத வீதமானவர்கள் பல்கலைக்கழகங்களில் இன்று படித்துக் கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப ஆசிரியர்களாகக் கடமை ஏற்று, சிலகாலத்தின் பின் பட்டதாரிச் சம்பளம் கோரி பட்டதாரி ஆசிரியர்களாகும் இவர்களது செயலாவு இரண்டு பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

ஒன்று, தொடர்ந்தும் எமது ஆரம்ப ஆசிரியர் தேவை அதிகரித்துக் கொண்டுபோகின்றதனால் கல்வியின் அத்திவாரம் சீர்குலைகின்றது.

இரண்டாவது தகுதியிருந்தும் பல்கலைக்கழகத்துக்குப் பல்கலைக்கழகத்துக்குப் புக முடியாத பலரின் சந்தர்ப்பத்தை இவர்களது செயல் வீணடித்து விடுகின்றது.

இதனால் பல்கலைக் கழகத்திலோ, வேறு உயர்கல்வி நிறுவனங்களிலோ கற்றுக் கொண்டிருப்பவர்களும், வேறு தொழில் புரிந்து கொண்டிருப்பவர்களும் இதில் நியமனம் பெற முடியாத வாறு நடவடிக்கை எடுப்பது எமது கடமையாகின்றது.

இப்படி அவர் கூறினார். (இ – 119)

இராமேஸ்வரம்-தலைமன்னார் கப்பல் சேவை மார்ச்சில்!

இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கப்பல் சேவை வருகிற மார்ச் மாதம் அளவில் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது சம்பந்தமாக இந்திய அதிகாரிகளுடன் இலங்கை அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தி வருவதாக போக்குவரத்து அமைச்சர் விஜேபால மென்டிஸ் தெரிவித்தார்.

இக்கப்பல் சேவை 1983 இனக்கலவரத்தை அடுத்து நிறுத்தப்பட்டது தெரிந்ததே. (உ-எ)

எங்கள் ஒற்றுமையிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது

சுதந்திரதின உரையில் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 6

எமது வெற்றி எங்களது ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது:

ஜனாதிபதி திரு: ஆர். பிரேமதாஸா தமது சுதந்திர தின உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற சுதந்திர தின விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்:

ஜனாதிபதி மேலும் சொன்னதாவது:

நமது மக்கள் நன்செயலையும் அச்சுறுத்தலையும் வரவேற்கத் தயாராக இல்லை. இதனை எமது ஜனநாயக நடைமுறையை அழிக்க முயன்றவர்கள் இப்போது உணர்ந்திருப்பர்:

உங்கள் அரசாங்கத்தில் பணிபுரியும் நாம் உங்களின் விசுவாசமான சேவகர்கள் நாம் உங்களின் எஜமானர்கள் அல்லர்:

நமது நாட்டை மீண்டும் கட்டி எழுப்ப நாம் மீண்டும் எம்மை அர்ப்பணம் செய்ய வேண்டும்: கலந்துரையாடல், இணக்கம் காணல், கருத்து உடன்பாடு ஆகியன மூலமே இதனைச் சாதிக்கலாம்.

இது இலகுவான காரியம் அல்ல. இது ஓர் உயர்ந்த பணி. இதற்கு ஒழுக்கம், புரிந்துணர்வு, புதியபார்வை, புதிய அணுகுமுறை ஆகியன தேவைப்படும்.

இன்றைய இளைஞர்கள் வரும்காலத் தலைவர்கள். அவர்களின் சக்தி ஆக்கபூர்வமாக நாட்டின் நலன்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்:

வெளிநாட்டு ஊடகங்கள் இல்லாத சுதந்திர இலங்கையில் அவர்கள் வாழ நாம் வழிகாட்ட வேண்டும். அப்போதான் அவர்கள் நம்பிக்கையுடனும் கௌரவத்துடனும் வாழ்வர்: இதை எம்மால் செய்ய முடியும்:

அமைதியை மீண்டும் கொண்டு வரும் எமது பணி தொடரவேண்டும்:

– இப்படி ஜனாதிபதி சொன்னார். (உ-எ)

மேலும் ஒரு வாரம் பேச்சுக்கள் நீடிக்கும்

கொழும்பு, பெப். 6

தற்போது கொழும்பில் தங்கியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து மேலும் ஒருவாரம் பேசுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய சுற்றுப்பேச்சுவார்த்தை கடந்தவாரம் ஆரம்பமானது.

இப்போது நடைபெறும் பேச்சுக்களின்போது மாகாண சபை, தமிழ் தேசிய இராணுவம், இந்தியப்படை வாபஸ், வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் பாதுகாப்பு நிலைமைகள் உட்பட பலவிடயங்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டானில் புதிய உ. அ. அதிபர் அலுவலகம்

ஒட்டுசுட்டான், பெப் 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பகுதிக்கு புதிதாக ஒரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது:

புதிய அலுவலகத்தை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு: க. பொன்னம்பலம் திறந்து வைத்தார்.

புதிய உதவி அரசாங்க அதிபராக திரு. செ. கனகசபாபதி நியமிக்கப்பட்டுள்ளார்,

திறப்பு விழாவில் பல அதிகாரிகள், சமூகசேவையாளர்கள் சிறப்புரை வழங்கினர்: (இ-113)

செஞ்சிலுவை அதிகாரிகள் யாழ் மாவட்டத்தில் ஆய்வு

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ் மாவட்டத்தின் நிலைமைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக செஞ்சிலுவைச்சங்கத்தின் சர்வதேசக் குழுவைச் சேர்ந்த இரு உயர்அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த திரு. லோறண்ட் சோப்பர், திரு. கே. எம். மெய்ஸன் ஆகியோரே கடந்த செவ்வாயன்று யாழ்வந்துசேர்ந்தனர்.

தடுப்புக்காவலில் இருந்து விடுதலையானோர் பற்றியும், வைத்திய உதவிகள் வழங்குதல், புனரமைப்பு வேலைகள், யுத்த நிலைக்குப்பின் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், தேவைகள் ஆகியவை குறித்தும் இவர்கள் ஆய்வுகளைச் செய்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தொண்டர் ஸ்தாபனப் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள், பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் இரு அதிகாரிகளும் ஆலோசனை நடாத்திவருகிறார்கள். (உ-3)

பழைய ஆலயங்களை புனரமைப்பது அவசியம்

கும்பாபிஷேக வைபவத்தில் உரை

புதிய ஆலயங்கள் கட்டுவதை விட்டு பழைமை பொருந்திய ஆலயங்களைப் புனரமைப்புச் செய்ய வேண்டும்.

தெல்விப்பளை அரசஞர் வளவை விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து பேசுகையில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்:

பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது:

கும்பாபிஷேக விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாவலர் பெருமான் [illegible] ஆலயங்களை அமைப்பதிலும் பார்க்க பழைமை பொருந்திய ஆலயங்களை புனரமைக்க வேண்டும்: என்று கூறியிருந்தார்:

இவ்வகையில் எம் பழமை பொருந்திய ஆலயங்களை நாம் புனரமைப்புச் செய்து சைவ மறுமலர்ச்சிக்கு உதவ வேண்டும்:

இவ்வாலயமும் பழைமை பொருந்தியதால்புனரமைத்து கும்பாபிஷேகம் நடாத்தியது: சைவ எழுச்சிக்கும் உதவும்:

இப்படி அவர் கூறுகிறார்:

கிரியா கலாமணி சிவ ஸ்ரீ சிதம்பரேஸ்வரக் குருக்கள் பிரமஸ்ரீ மகாதேவக்குருக்கள் பிரமஸ்ரீ [illegible] குருக்கள் ஆகியோரும் ஆசி [illegible]

பிரயாணம் பிரயாணம் பிரயாணம்

'M' THREE TRAVEL

வழங்கும் உடனடி பிரயாணம்

சவூதி அரேபியா, மாலைதீவு.

சவூதி அரேபியா [Saudi Arabia]

		வெற்றிடம்	சம்பளம்
1.	Equipment Operator (Heavy) (கனரக உபகரண இயக்குநர்)	5	650 S.R.
2.	Equipment Operator (Light) (கனம் குறைந்த உபகரண இயக்குநர்)	5	550 S.R.
3.	Irrigation Repairman	4	350 S.R.
4.	Landscaping Foreman (Driver)	6	550 S.R.
5.	Irrigation Foreman (Driver)	6	550 S.R.
6.	Landscaping Lerdman (Driver)	14	450 S.R.
7.	Mason (மேசன்)	2	450 S.R.
8.	A/C Technician	4	1000 S.R.
9.	Diesel Technician (Generator Mechanic)	4	900 S.R.
10.	Control Technician	3	1000 S.R.
11.	Fire Alarm Technician	3	1000 S.R.
12.	Electrician (Building) (கட்டிட மின் இணைப்பாளர்)	10	750 S.R.
13.	Cleaner (சுத்திகரிப்பாளர்)	50	325 S.R.

மாலைதீவு Maldives

தையல் உதவியாளர் பெண்கள் மட்டும் 70 USD

ஒரு கிழமையில் பிரயாணம் மேற்கொள்ளலாம்

✶ Passport Bond என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்,

● நம்பிக்கை ● நாணயம்

என்பனவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய தாபனம்

'M' THREE TRAVEL

அலுவலகம்:

இல. 1, 2வது ஒழுங்கை,
மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்,

[சி/3767]

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L DAY CLASS 1990

ஆரம்பம்: 07-02-1990

விரிவுரையாளர்கள்

பொருளியல்	—	குமாரவேல்
வர்த்தகம்	—	தேவா
கணக்கியல்	—	யோகராஜா
அளவையியல்	—	சயந்தன்
தமிழ்	—	குமுதன்
புவியியல்	—	குணராஜா
இந்துநாகரீகம் / இந்துசமயம்		அருள்நங்கை
அரசியல்	—	குமார்

SPOKEN ENGLISH By Brito

வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

தொடர்பு:
S. அருள்நங்கை

(சி/3760)

இன்று ஆரம்பம்

விக்ரு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புகளுக்கும் ஆண்டு 6 – 10 வகுப்புகளுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

பிரிவு 7 மீட்டல்

O/L DAY CLASSES (8.30 – 1.30)

இறுதிப் பிரிவு 05 – 02 – 1990

EVENING CLASSES (Dec)

பிரிவு 3 [3.00 — 5.00]

ஆரம்பம்: 05 – 02 – 1990

இவ்வருட தூர இடத்து மாணவர்களின் நலன் கருதி சனி, ஞாயிறு பிரிவு

ஆரம்பம்: 18 – 02 – 1990

விஞ்ஞானம்:-	8 — 9	கணிதம்:-	9 — 10
தமிழ்:-	10 — 11	சமயம்:-	11 — 12
சமூகக்கல்வி:-	12 — 1	ஆங்கிலம்:-	1 — 2

ஆண்டு 6, 7, 8, 9, 10 பிரிவு B

(A பிரிவுக்கு அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளது)

ஆரம்பம்: 05 – 02 – 1990 (3.00 — 5.00)

i அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினர் போதிக்கப்படும்
ii தவணைப் பரீட்சைகள் நடத்தி பெறுபேறுகள் தேர்ச்சி அறிக்கை மூலம் வழங்கப்படும்
iii கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
iv விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்

[சி-3747]

தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பெண் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. பார்மஸி மருத்துவத் துறையில் முன் அனுபவம் வாய்ந்த பெண்கள் மட்டும் நேரில் விண்ணப்பிக்கவும்.

Ratnam Pharmacy & Grocerey

388, Hospital Road, Jaffna.

(2240)

T V TRAVELS & TOURIST

● சவூதி அரேபியா

1. Labourers
2. Tinkers
3. Plumbers
4. Mechanics
5. Technicians
6. Electricians
7. Ladies Cleaners

மற்றும் குவைற் (Kuwait) நாட்டிற்கு இம்மாதம் முடிவிற்குள் போவதற்கு ஒழுங்கு செய்து தரப்படும்: அத்துடன் சிங்கப்பூர் நாட்டிற்கு வீட்டுப் பணிப்பெண்களுக்கும் தொழில்கள் பெற்றுத்தரப்படும்.

கலர்ப்படம் பாஸ்போர்ட் சைஸ் "6 — " புகைப்படம் கடவுச்சீட்டுடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்:

(Front of Railway Station)

Brown Road,
KOKUVIL.

(C-3750)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வாசகர் திருமுகம் ★

தென்மராட்சிப் பகுதி புறக்கணிப்பு ஏன்?

பயிலுனர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சையைத் தென்மராட்சியிலும் நடத்த கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்ய வேண்டும்.

இப்பரீட்சை வடமகாணத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, மாதகலுமடம், வேலணை ஆகிய இடங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இந்தவிஷயத்தில் தென்மராட்சி ஒதுக்கப்பட்டுள்ளது கவலைக்குரிய விஷயமாகும்.

தென்மராட்சியில் 13 பரீட்சை மண்டபங்களில் சுமார் 2,000 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

காலஞ்சென்றாவது கல்வித்திணைக்களம் தக்க நடவடிக்கை எடுக்குமா?.

சி. தம்பித்துரை,
சாவகச்சேரி.

நெடுந்தீவு மக்களின் இடர் தீருமா?

நிரந்தர உதவி அரசாங்க அதிபர் இல்லாததால் நெடுந்தீவு மக்கள் கஷ்டப்படுகின்றனர். கடந்த ஒரு வருடகாலமாக இத்தகைய நிலைக்கிறது.

சமீபத்தில் நிரந்தர உதவி அரசாங்க அதிபர் நியமனங்கள் ஒதுக்கப்பெற்ற போதும் இந்தப்பதவிக்கு ஒய்வு பெறுபவர்களை நியமித்தமையினால் அவர்களும் ஒருகில வாரங்கள் கடமையாற்றிவிட்டு ஓய்வு பெற்றுவிட்டனர்.

ஜனசக்தி நிலையம், நிலாவரை கொடுப்பனவுகள் போன்ற முக்கிய நடவடிக்கைகளும் இதர அத்தியாவசிய கடமைகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் உதவிப்பணம் வழங்குதல் உட்பட முக்கிய கடமைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றது

சம்பந்தப்பட்டவர்கள் நெடுந்தீவு மக்களின் இடர் தீர்க்க நடவடிக்கை எடுப்பார்களா?

அ. இலக்குவன்.
நெடுந்தீவு.

இன உணர்வால் உடைந்த சுவர்!

28 வருடங்களின் பின் கலகலத்தது!!

கி. ஐரோப்பாவில் வீசிய கோர்பச்சேவ் அலை ஜேர்மனியில் ஏற்படுத்திய விளைவு

கடந்தது போன 1987 நவம்பர் 9 ஆம் திகதி நள்ளிரவு... இரண்டு ஜெர்மனிகளும் உறவாடிக் கொண்டிருந்தபோதும், பெர்லின் நகரம் மட்டும் தூங்கவில்லை! தெருக்களில் கும்பல் கும்பலாக மனிதர்கள்... ஆண்களும் பெண்களும் அடக்க முடியாத ஆனந்தத்தில் கண்களில் நீர் துளும்ப அழுகிறார்கள். சிரிக்கிறார்கள். எதிரே வரும் அறிமுகமற்றவர்களிடம் எல்லாம் அன்பாய் கைகுலுக்கி, கட்டித் தழுவுகிறார்கள். ஷாம்பெய்ன் மது பாட்டில்களும் நொடியில் காலி செய்யப்படுகின்றன.

ஊரே திருவிழாக் கோலம் தரித்திருக்கிறது... "கிறிஸ் மஸ்" புத்தாண்டு. ஈஸ்டர் எல்லாமே ஒன்றாகி போன்ற "கோலாகலம் இது" என்கிறார் பெர்லின் வாசி ஒருவர். எதற்காக இந்தக் கொண்டாட்டம்..?

எல்லாம் ஒரு கருமாக... துல்லியமாகச் சொன்னால், ஒரு சுவரை இடிப்பதைக் கொண்டாடுவதற்காக... 28 வருட காலமாக கிழக்கு பெர்லின் மக்களையும், மேற்கு பெர்லின் மக்களையும் பிரித்து வைத்திருந்த பெர்லின் சுவர் அது!

நாளுக்கு நாள் ஒரு ஜெர்மனிகளுக்குமிடையில் இருந்த வேறுபாடு முற்ற முற்ற... அமெரிக்க–சோவியத் யூனியன் வல்லரசுகளின் மௌன யுத்தம் வலுக்க வலுக்க... பெர்லின் நகரின் நடுவே ஒரு சுவர் கிளம்பியது.

1961 ஆகஸ்ட் 13 ஆம் திகதி என்று அது ஒரு சுவராக இல்லை முதலில் முள்வேலி தான் போடப்பட்டது. வேலிக்கு இருபுறமும் கட்டடங்கள் இருந்தன. கிழக்குப் பகுதியிலிருந்து மேற்கே போய் விட விரும்பியவர்கள், இவற்றின் மூன்றாவது நான்காவது மாடி ஜன்னல்களிலிருந்து சாகஸ அலட்சியம் செய்து மறுபுறம் குதித்தார்கள். சிலர் இறந்தார்கள். சிலர் தப்பினார்கள். கட்டடங்களின் ஜன்னல்கள் அடைக்கப்பட்டன. பூமிக்குக் கீழே சுரங்க வழி தோண்டிச் சிலர் மறுபக்கம் போனார்கள். கட்டடங்கள் இடிக்கப்பட்டு, வேலிக்குப் பலமடி தொலைவு வரை வெறும் மைதானமாக்கப்பட்டது. தப்பியோடப் பார்த்தவர்கள் சுடப்பட்டார்கள்.

முள்வேலி பிறகு பெரும் சுவராக மாறியது. கடந்த 28 வருடங்களில் இந்த வேலியைத் தாண்ட முற்பட்டதில் வெற்றி பெற்றவர்கள் சுமார் ஐயாயிரம் பேர். 191 பேர் பலியானார்கள்.

இப்போது பெர்லின் சுவர் கலகலத்துவிட்டது

நவம்பர் 9, 10, 11 திகதிகளில் மட்டும் சுமார் ஒரு லட்சம் கிழக்கு பெர்லின் வாசிகள் மேற்கு பெர்லினுக்கு எந்தத் தடையுமின்றிச் சுதந்திரமாகப் போய் வந்தார்கள். அந்த நாட்களில் பெர்லின் திருவிழா நகரமாயிற்று. தங்கள் கிழக்கு சகோதரர்கள், கிழக்கு ஜெர்மானியர்கள் தொடர்ந்து வாரம் செய்தார்கள்; இடிக்கப்படும் பெர்லின் சுவரிலிருந்து துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டார்கள். பல தலைமுறைகளுக்கு அந்தத் துண்டுகள் ஒரு ஞாபகச் சின்னமாக இருக்கும்.

திடீரென்று எப்படி பெர்லின் சுவரை இடிக்க கிழக்கு ஜெர்மன் அரசு முன்வந்தது...?

உண்மையில் அது அப்படியொன்றும் திடீர் நிகழ்ச்சியல்ல... கிழக்கு ஜெர்மனியை ஒட்டியுள்ள செக்கோஸ்லோவேகியாவும் ஹங்கேரியும் தங்கள் விதிகளைத் தளர்த்தியதையடுத்து, உள கிழக்கு ஜெர்மானியர்கள் சுற்றுலா வழியாக (சுமார் 1,500 மைல் சுற்று!)

கோர்பச்சேவ்

மேற்கு ஜெர்மனிக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். சுமார் இரண்டு லட்சம் பேர் இப்படிப் போனதாக அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு ஜெர்மனியிலுள்ள கம்யூனிஸ்ட் அரசாங்கத்திடம் பல உரிமைகளை கோரி மாபெரும் ஆர்ப்பாட்டங்களைக் கடந்த சில மாதங்களாகவே மக்கள் நடத்தி வந்தார்கள். அதன் விளைவாக, பல அடுக்கடுக்கான மாற்றங்கள் நலடபெற ஆரம்பித்தன.

பெர்லின் சுவரைக் கட்டிய போது ஆதரவு கோரிபார்வை விட்டவராக எரிக் ஹொனேக்கர் கம்யூனிஸட் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

ஹொனேக்கர் நினைத்தது

ஒன்பது மாதங்களுக்கு முன் ஹொனேக்கர் சொன்னார்! "இன்னும் நூறாண்டுகளுக்கு குறையாமல் பெர்லின் சுவர் அப்படியே இருக்கும்!"

ஹொனேக்கர், பெர்லின் சுவர் விழுவதற்கும் முன்னாகவே ஆட்சித் தலைமையிலிருந்து விழுந்துவிட்டார். ஹொனேக்கரின் ஆளாகக் கருதப்பட்ட எகொன் க்ரென்ஸ் தலைவரானார்.

க்ரென்ஸ் தலைவரானதுமே, தான் ஹொனேக்கர் பாணியில் ஆட்சி நடத்த முடியாது என்பதை உணர்ந்திருப்பதை நிரூபித்தார். கம்யூனிஸட் கட்சியின் பழைய பொலிட் பீரோ விலகியது. புதிய குழு உருவானது. பழைய பிரதமரை விலகிக்கொண்டார். 'இனி கிழக்கு ஜெர்மானியர்கள் விசா இல்லாமல் எந்த மேற்கத்திய நாட்டுக்கும் போய் வரலாம்' என்று க்ரென்ஸ் அறிவித்தார். அதன் தொடர்ச்சியாகவே பெர்லின் நகரிலும் சுவர் ஆங்காங்கு இடிக்கப்பட்டு, வழிகள் உருவாக்கப்பட்டன. சுவர் இடிக்கப்படுவதற்குச் சில நாட்கள் முன்பு தான் கிழக்கு பெர்லினைச் சேர்ந்த இன்கோ கார்கெல் என்ற பதினாறு வயது இளைஞர் செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி வழியே 1500 மைல் சுற்றி மேற்கு பெர்லினுக்கு வந்து சேர்ந்தார். வந்தவுடன் சொன்னார்கள்: "பெர்லின் சுவர் வழியாகவே வந்திருக்கலாமே..." என்று! "சுவர் வழியாகவா...?! அனுமதி தருகிறார்களா...? அப்படியானால் இப்போதைய கிழக்கு ஜெர்மனி அரசு மேலும் இருக்க வேண்டும். நானறிந்த அரசு அப்படியில்லை..." என்றார் கார்கெல்.

கார்கெல் மட்டுமல்ல பெர்லின் சுவரருகே நின்ற எல்லைக் காவலதிகாரி ஒருவர்கூட முதலில் இதை நம்பவில்லை. அதிகாரபூர்வமான செய்தி நிறுவனத்தின் அறிக்கையை வாசித்த பிறகும் அந்த அதிகாரி குழப்பத்திலிருந்தார். சில நிமிடங்களில் குழப்பம் மாறியது.

ஆயிரக்கணக்கில் சுவரைக் கடந்து போனார்கள் மக்கள். கிழக்கு பெர்லின் மேயரும், மேற்கு பெர்லின் மேயரும் கைகுலுக்கிக் கொண்டார்கள். 1961-ல் சுவர் எழுப்பப்பட்ட போது மேற்கு பெர்லின் மேயராக இருந்தவரும், பிறகு ஜெர்மன் அதிபராகி ஒய்வு பெற்றவருமான வில்லி பிராண்ட் மக்களின் உற்சாகத்தில் வந்து கலந்து கொண்டார்.

கிழக்கு ஜெர்மனியில் விரைவில் தேர்தல்கள் நடத்தவும், பலகட்சித் தேர்தல் முறையை ஏற்கவும் க்ரென்ஸ் வாக்குறுதி அளித்திருக்கிறார்.

உண்மையில் பெர்லினில் கிழக்கு ஜெர்மனியில் மட்டுமல்ல, அண்மையில் ஹங்கேரியில், போலந்தில், பல்கேரியாவில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மனப்பான்மையில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஐரோப்பாவையே குலுக்கியிருக்கிறது. சோஷலிஸத்தை விட்டுக் கொடுக்காத பல கட்சி ஜனநாயக அமைப்புக்கு இந்தக் கட்சிகள் தயாராகிவிட்டன.

இந்த மாற்றத்துக்கு யார் காரணம்...? வேறு யார்? கோர்பச்சேவ்தான்.

சோவியத் யூனியனில் தொடங்கி, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் கோர்ப்பசேவின் ஜனநாயக அலை வீசுகிறது. கிழக்கு ஜெர்மனியிலும் ஹொனேக்கர் விலகலுக்குக் கோர்ப்பசேவே மறைமுகக் காரணமாக இருந்தார். அவர் பெர்லின் சென்று திரும்பிய சில நாட்களில் மாற்றம் ஏற்பட்டது.

கிழக்கு ஜெர்மானியர்களும், மேற்கு ஜெர்மனிக்குமிடையே இருந்த நடமாட்டத் தடை விலகியிருப்பது பல புதிய சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறது

கிழக்கு ஜெர்மானியர்கள் (அமெரிக்கா இதுவரை கூறி வந்தது போல) பெருமளவில் தங்கள் நாட்டைவிட்டு இனியும் வெளியேறி மேற்கு ஜெர்மனியில் குடியேறுவார்களா? தடைகள் இருந்து வந்த காலத்தில்... கடந்த நாற்பதாண்டுகளில் – 27 லட்சம் பேர் கிழக்கு ஜெர்மனியிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள் என்பது அமெரிக்க மதிப்பீடாகும். கிழக்கு ஜெர்மனியின் மொத்த மக்கள்தொகை ஒரு கோடியே எழுபது லட்சமாகும். மொத்த மக்கள் தொகையில் மேலும் பத்து சதவிகிதம் பேர் (அதாவது, பதினேழு லட்சம் பேர்) தடை நீங்கியதும் வெளியேறுவார்கள் என்றும் மதிப்பிடப்பட்டது.

வேடிக்கை பார்க்கவே

அவ்வளவுபேர் வெளியேறுவார்களா என்பது ஒருபுறமிருக்க வெளியேறி வருபவர்களை ஏற்றுக்கொள்ள மேற்கு ஜெர்மனி தயாராக இல்லை.

ஆனால் பெர்லின் சுவர் உடைப்புக்குப் பிறகு உடனடியாக வந்த சுமார் ஒரு லட்சம் பேரில் ஆயிரம் பேர் மட்டுமே மேற்கேயே தங்க விரும்புவதாக (ஒரு சதவிகிதம் தான்) கூறியதாக ஹெராட் ட்ரிப்யூன்' தகவல் தெரிவிக்கிறது. நான் காலை பனிக்கூடம் போக வேண்டும். இந்தப் பயல்களுக்கு வேடிக்கை காட்ட வந்தேன்... அவ்வளவுதான்' என்று ஹெல்முட் க்வாட்ஸ் என்பவர் கூறியதாக, பத்திரிகையாளர் ரிச்சர்ட் ஸ்மித் எழுதியுள்ளார். க்வாஸ்ட்டைப் போலவே பலரும் வேடிக்கை பார்க்க வந்தார்கள்.

வேடிக்கை பார்க்க வருவது தொடர்வதில் மேற்குத் தரப்பும் ஆட்சேபமில்லை; ஆனால் ஒரேதாவில் வந்து குவியாதீர்கள்... தடைதான் இவி இல்லையே... சாவகாசமாக வாருமே... என்று மேற்கு ஜெர்மனியின் உயரதிகாரி ஒருவர் அகதிகள் மத்தியில் பேசும்போது கேட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவின் சரிவுக்குக் காரணம்

அவரது இரண்டுபட்ட மனநிலை!

கடந்த ஆண்டின் இறுதியில் நடைபெற்ற இந்தியப் பொதுத்தேர்தலில் ராஜீவ் காந்தி தோல்வியுற்றார். இதற்குப் பின் அவருடைய வீழ்ச்சியை ஆராய்ந்த பிரபல இந்தியப் பத்திரிகையாளரான குஷ்வந்த் சிங் 'சண்டே' என்ற பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

பத்திரிகையாளர் வெளியிடும் சில உள்வீட்டுத் தகவல்கள்!!

ராஜீவ்காந்தி தமது அரசியல் வாழ்க்கையைப் பெரும் வாய்ப்புகளுடன் ஆரம்பித்தார். ஆனால் குறுகிய நாலு ஆண்டுகளில் அவர் தம்மிடமிருந்த நல்லெண்ணம் அனைத்தையும் நாசமாக்கி விட்டார்.

நான் இங்கு அவருடைய அரசியல் வீழ்ச்சிக்கான நிழற்சிகளை எடுத்துக் கூறவில்லை. ஒரு தனிமனிதன் என்ற முறையில் அவரைப்பற்றி எனக்குத் தெரிந்த சில விஷயங்களையே கூற முற்படுகின்றேன்.

அவருடைய தாயார் அவர் மீது திணித்த பாங்கரமான பொறுப்புகளை நிறைவேற்றும் திறமை அவர்டம் இருந்ததா? என்ற கேள்விக்கான பதிலைத் தேட இது எமக்கு உதவலாம்.

ராஜீவ் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்தகாலத்தில் எனது மகளும் அங்கு கல்விகற்றார். அவருடைய பாட்டனார் ஜவஹர்லால் நேரு கல்விகற்ற அதே ட்ரினிற்றி கல்லூரியில் அவரும் கல்வி கற்றார். ஆனால் பாட்டனார் வேறு, ராஜீவ்வேறு.

ராஜீவ் கல்வியில் ஒரு போதும் நாட்டம் கொள்ளவில்லை. ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு அவர் மாறிக் கொண்டே இருந்தார். அவர் தனது படிப்பை முடிக்காமலே ஒன்றரை ஆண்டுக் காலத்தின் பின் பக்கிங்கிழத்தை விட்டுச்சென்றார். வேகமான கார்களிலும் தேநீர்க்கடைகளிலும் அவரடைய காலம் சென்றது.

ராஜீவுடைய தாயார் அவரைப்பற்றித் திருப்தி அடையவில்லை. தமது விருப்பத்திற்குரிய இளைய மகனை சஞ்சேசாந்திக்கு எழுதிய கடிதங்களில் இந்திராகாந்தி இந்த ஏமாற்றத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

ராஜீவ் கேம்பிரிட்ஜிலிருந்து செய்த பெரிய விஷயம் அழகிய ஒரு இத்தாலிப் பெண்ணை சோனியாவைக் கண்டுபிடித்ததாகும்.

சோனியா கேம்பிரிட்ஜில் ஆங்கிலம் கற்றுக்கொண்டிருந்தார்.

அவர்கள் இருவரும் சரியான ஜோடி. சோனியா,

ராஜீவ்

மாமியார் இந்திராவின் இதயத்தைப் பிடித்துக்கொண்டார். திருமதி இந்திரா காந்தி மருமகள் மேனகாவிலும் பார்க்க மருமகள் சோனியாவைக் கூடுதலாக விரும்பினார். மேனகாவை இந்திரா சாதாரண மாமியார் நடத்துவதுபோலவே கடுமையாக நடத்தினார்.

சஞ்சயின் மறைவுக்குப் பின், இந்திராகாந்தி மேனகாவுடன் மேலும் மோசமாக நடந்துகொண்டார். மேனகாவை அவர் வீட்டிலிருந்தே வெளியேற்றினார்.

ராஜீவுக்கு அரசியலில் ஈடுபாடு கிடையாது. ராஜீவ் இந்திய விமான நிறுவனத்திலிருந்து விலகியது தனது (இந்திரா காந்தியின்) அலுவலகவேலையில் உதவி செய்யவே என்று திருமதி காந்தி ஒரு தடவைக்கு மேலாக என்னிடம் கூறியிருக்கிறார்.

ராஜீவ் அரசியலில் பங்கு பற்றினார்தான் தனது சகோதரன் விவாகரத்துச் செய்வார் என்று சோனியா உறுதியாகக் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது வெறும் ஏமாற்றுப் பேச்சு. சஞ்சயின் மறைவுக்குப்பின் ராஜீவை அதிகாரத்தில் அமர்த்தவேண்டும் என்பதில் இந்திரா உறுதியாகஇருந்தார். தமது உறவினர்களான அருண்நேரு, ராஜீவின் நண்பர்களான அருண்சிங், சத்தியநாராயணா ஆகியோரைக் கொண்டு ராஜீவுக்கு தூண்டுதல்கொடுத்தார்.

அரசியலில் பிரவேசிப்பது பற்றி ராஜீவ் ஆரம்பத்தில் என்னை தயக்கத்தைக் கொண்டிருந்தாலும், அரசியலில் பிரவேசித்தபின், அரசியலுடன் வரும் அதிகாரத்தையும் ஆட்சியையும் அவர் அனுபவிக்கத் தொடங்கினார். ஆனால் மாணவனாகும் விமான ஓட்டியாகவும் இருந்த காலத்திற்போலவே அவர் எப்பொழுதும் உறுதி அற்றவராக இருந்தார்.

அவருடைய சகோதரர் என்னிடம் கூறினார்; ஒவ்வொரு நாள் காலையிலும் குடும்பத்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

நினைவில் இன்று

● சண்டேசுவரர் குருபூஜை
● மோதிலால் நேரு
நினைவு தினம்
தோற்றம்: 6-5-1861
மறைவு: 6-2-1931

கண்டதை கேட்டதை

யாழ் நகரம் தற்போது மீண்டும் சுறுசுறுப்பான நகரராக மாறி வருகிறது.

நகரில் வாகன நெருக்கடி ஏற்படும் அளவுக்கு வாகனப் புழக்கம் அதிகரித்து வருகிறது.

யாழ்ப்பாண நகரின் பல பகுதிகளையும், குறிப்பாக கோட்டையுடன் அண்டிய பகுதிகளை, நகரத்து மக்கள் பலரே உல்லாசப் பிரயாணிகள் பார்ப்பது போல நாளாந்தம் சென்று பார்வையிடுகிறார்கள்.

புதுப்புது வாகனங்கள் கூட வீதிகளில் பவனி வருகின்றன; சைக்கிள் ஓட்டக்காரர்களுக்கும் குறைச்சல் இல்லை.

ஆனால், ஒன்றை மட்டும் சகிக்கமுடியாதிருக்கிறது என்று மக்களில் பலரும் குறைபடுகிறார்கள்.

இதுவரையும் வீடுகளிலும், கொழும்பிலும் முடங்கிக் கிடந்த இளம் வட்டங்கள் கைகோர்த்த வண்ணம் சைக்கிள்களில் பவனி வருகிறார்கள்!

இது வாகன ஓட்டிகளுக்கு மட்டுமன்றி பாதசாரிகளுக்கும் எரிச்சல் ஊட்டுவதாக உள்ளது. போக்குவரத்துக்குத் தடையாகவும், விபத்துகளுக்கு ஏதுவாகவும் இருக்கிறது.

பாதசாரி ஒருவர், "இதுகள்" இன்னும் பாடம் படிக்கவில்லை என்று முணுமுணுத்தது செய்திலோலனின் காதுகளில் விழுந்ததை சொல்லி வைக்க வேண்டி இருக்கிறது.

— செய்தி லோலன்

RUSH!
FOR QUICKEST DELIVERY OF YOUR DOCUMENTS, LETTERS, PARCELS Etc
TO ANY COUNTRY, ANY TIME
DHL WORLDWIDE EXPRESS®
337, KASTURIAR ROAD, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் தோறும்

இந்துசமயப் பயிற்சி வகுப்பு

துணை அமைச்சர் திட்டம்

கொழும்பு, பெப். 6

கல்வி அமைச்சுடன் இணைந்து மாணவர்களுக்கு இந்துசமய கொள்கைகளைப் போதிக்க இந்துசமய பயிற்சி வகுப்புக்கள் பாடசாலைகள் தோறும் நடத்தப்படும்.

இந்துசமய இந்துகலாசார தமிழ் அலுவல்கள் துணை அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இதற்கு முன்னோடியாக பாடசாலை மாணவர்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் நல்வழி, முதுரை போன்ற நூல்களை அமைச்சு பிரசுரிக்கவிருக்கிறது.

அத்துடன் சைவத் தோத்திரப்பாக்கள் கொண்ட ஒலிப்பதிவு நாடாக்களை பாடசாலைகளுக்கு கல்வித்திணைக்களத்தின் செலவில் வழங்கவும் நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

சைவாசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைத் தீர்க்க பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்று அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் உதயனுக்குத் தெரிவித்தார். [இ-3]

நெசவுக் கைத்தொழில் கிராமங்கள் தெரிவு

சாவகச்சேரி, பெப் 6

புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தின் வேண்டுகோளை அடுத்து தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் வடக்கு, சரசாலை ஆகிய இரு கிராமங்களையும் உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை நெசவுக் கைத்தொழில் கிராமங்களாகத் தெரிவு செய்துள்ளார்.

இரு கிராமங்களிலும் இருந்து தலா 22 பேர் வீதம் 44 பேரின் பெயர்களை நெசவுப் பயிற்சிக்காக அவர் அனுப்பி வைத்துள்ளார். (இ-31)

தமிழ் தினவிழா

கொழும்பு, பெப் 6

தமிழ் வளர்ச்சியை மையமாக வைத்து எதிர்வரும் மே மாதம் எட்டாம் திகதி கொழும்பில் தமிழ்த்தினவிழா நடத்தப்படும்.

இந்துசமய, இந்துக்கலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

விழாவுக்கு முன்னோடியாக சிறுவிழாக்களையும் சாகித்திய விழாவையும் புத்தகக் கண்காட்சியையும் நடத்த ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

மாகாண மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, கவிதை போட்டி, நாடகப் போட்டிகளையும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்த்தினவிழாவை சிறப்பாகக் கொண்டாட சகலரது ஒத்துழைப்பையும் துணை அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் கோரியுள்ளார். (இ-3)

கொக்குவில் இந்துவில் கொத்தணி அதிபர் கருத்தரங்கு

கொக்குவில், பெப். 6

யாழ்ப்பாணம், மருதனார்மடம், பண்டத்தரிப்பு, கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

"கொத்தணி அமைப்பு, மேற்பார்வையும் மதிப்பீடும், திட்டமிடலும் அபிவிருத்தியும், நிதி நிர்வாகம்" பற்றிய இக்கருத்தரங்கும் செயலமர்வும் இம்மாதம் 17இலிருந்து 20வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராஜா மருதனார்மடம் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரம், பண்டத்தரிப்பு கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரும் கொக்குவில் கொத்தணி அதிபருமான திரு. அ. பஞ்சலிங்கம், புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி அதிபரும், கொத்தணி அதிபருமான திரு. என். கணேசபிள்ளை, யாழ்ப்பாண கோட்டக்கல்வி அலுவலகக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் யாழ் கல்வி மாவட்ட கணக்காளர் திரு. எஸ் அகுலதீரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (இ-67)

விக்ரு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

90 கலை, வர்த்தக மீட்டல் வகுப்புக்கள்

DAY CLASSES [7.15]

ஆரம்பம்: 19 - 02 - 1990

Sat & Sun Classes [8.00 — 12.00]

ஆரம்பம்: 18 - 02 - 1990

[சி-3788]

கலை வர்த்தகக் கல்லூரி

C. C. A

மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்தி அருகே)

சனி, ஞாயிறு வகுப்புகள்

A/L 90, 91

புதிய பிரிவுகள்

பொருளியல்	-	வரதராஜன்
வர்த்தகம்	-	ரட்ணம்
கணக்கியல்	-	ஸ்ரீ
அளவையியல்	-	S. S. மனோகரன்
தமிழ்	-	குழந்தை
இந்துநாகரீகம்	-	கிருஷ்ணா
புவிநியல்	-	சன்

ஆரம்பம்: 10- 02- 1990

சனி 8. 00 A. M

A/L 90 மீட்டல் வினா - விடை வகுப்பு

ஆரம்பம்: 10- 02- 1990

சனி 12. 00

G. A. Q - B. A வகுப்புகள்

ஆரம்பம்: 10- 02- 1990 சனி

C/3771

செயல் முறைப் பரீட்சை

கடந்த வருட இறுதியில் நடைபெற்ற ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் மனைப் பொருளியல் பாடத்தின் செயல் முறைப் பரீட்சை கொழும்பில் நடைபெற்றுவருகிறது.

இப் பரீட்சையில் தோற்றுவதற்கு வடபகுதி மாணவிகள் கொழும்புக்கு சென்று கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. (இ - 113)

மக்கள் முகம்

இளைப்பாறினார்

பருத்தித்துறை வலயப்பகுதிகளில் கூட்டுறவு உதவி ஆணையாளராகப் பணிபுரிந்த மீசாலையைச் சேர்ந்த திரு. எம். வாரித்தம்பி சுமார் நாற்பது வருட சேவையின் பின் இளைப்பாறினார். (இ-75)

துணை அதிபர்

கொடிகாமம் பெப் 6

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி துணை அதிபராக திரு. எம். நாகேந்திரராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் துணை அதிபராக திரு. எ. எஸ். பாரதத்தினம் ஓய்வு பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-75)

மறுமலர்ச்சி கழகம்

யாழ்ப்பாணம், பெப் 6

யாழ்-பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தில் புதிதாக மாணவர்கள் பலரும் சேர்ந்து வருவதாக கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

சமுதாய நலனையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றி வரும் மறுமலர்ச்சிக்கழகத்தில் பல மாணவர்கள் புதிய அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர்; என்றும் மேலும் பலர் அங்கத்தவர்களாக இணைவதில் ஆர்வம் காட்டிவருகின்றனர் என்றும் அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மீளக்குடியமர்தல் 2 ஆம் கட்ட நிதி உதவி

யாழ்ப்பாணம், பெப் 6

யாழ் மாவட்டத்தில் மீளக்குடியமர்தல் படி உதவித் தொகையில் முதல் கட்டமாக 1000 ரூபா பெற்ற சகலருக்கும் இரண்டாம் கட்ட உதவி வழங்குவதற்கான பணம் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று யாழ். அரசாங்க செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மீளக்குடியமர்தல்படி முதல் கட்டமாக ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இரண்டாம் கட்ட ஆயிரம் ரூபாவும் யாழ் அரசாங்க செயலகத்தால் கடந்த வருட இறுதியுடன் முதல் கட்டம் பெற்ற குடும்பங்களுக்கு வழங்க வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இப்பணத்தை விரைவாக வழங்க வங்கிகள் நடவடிக்கை எடுக்கின்றன என்று அறிய வந்தது. (இ 3)

ராஜீவின்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் காலைச் சாப்பாட்டுக்காக மேசையில் இருந்தபோது பணியாள் என்ன சாப்பாடு என்று கேட்க வருவார். ராஜீவ் ஒருவர் தான் தேநீர் வேண்டுமா? கோப்பி வேண்டுமோ என்பது பற்றித் தீர்மானிக்க முடியாதவராக இருப்பார். அவர் முதலில் கோப்பி கொண்டு வரும்படி கூறுவார். ஆனால் பணியாள் திரும்புமுன் அவர் மனதை மாற்றித் தேநீர் கொண்டுவரும்படி கூறுவார். பின்னர் கோப்பி கொண்டு வரும்படி கூறுவார்.

உறுதியற்ற இரண்டு மனநிலை ராஜீவின் மிகப் பெரிய குறைபாடாகும். முடிவு எடுக்காமல் தளம்புதல், முடிவு எடுத்த பின் அதன்படி நடக்கத் தவறுதல் ஆகிய குறைபாடுகளுடைய ராஜீவ் பின்னர் தன்னுடைய "வால்பிடி"களிடம் ஆலோசனை பெறுவார். (ம)

★

இன உணர்..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுக் கொண்டார்.

ஐரோப்பாவிலுள்ள சோஷலிஸ நாடுகளிலேயே கிழக்கு ஜெர்மனிதான் வளமான நாடு. எங்கள் அகதிகள் யாரும் பிச்சைக்காரர்களாக செல்வதில்லை நல்ல உடை உடுத்தி சொந்த காரில்தான் அங்கு செல்கிறார்கள்... என்று கிழக்கு ஜேர்மனியில் கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டணிக் கியான லிபரல் டெமாக்ரெடிக் கட்சித் தலைவர் மான்பிரட் கெர்லாக் கொஞ்சம் பெருமையுடனே சொல்லிக் கொண்டார்.

அமெரிக்க அரசாங்கத்தின் மதிப்பீட்டின்படி, தேசிய உற்பத்தி, நபர் ஒன்றுக்கு சோவியத் யூனியனில் 8. 850 டாலர்தான். கிழக்கு ஜெர்மனியில் 12 480 டாலர்.

இன உணர்வு

வசதி வாய்ப்புக்காக மேற்குப்பகுதிக்குப் போனாலிட்டாலும், வேடிக்கைக்காப் போனாலிட்டாலும் கிழக்குஜேர்மனியர்கள் மேற்கே போய் வரவேறொரு முக்கிய காரணம் உண்டு. அதுதான் ஜெர்மனிய இன உணர்வு ஒரு மொழி ஒரேகலாசாரம், ஒரே தேசிய இனமான நாம் பிரிந்திருக்கிறோமே என்ற வருத்தம் பல ஜெர்மனியர்களின் அடிமனதில் பொதிந்து கிடக்கிறது. என்கின்றார்கள் வரலாற்றாசிரியர்கள். இந்தத் தேசிய உணர்வைப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பிடித்த ஹிட்லர் நடத்திய வெறியாட்டம் ஜெர்மனியை இரண்டாக்கியது.

மீண்டும் ஜெர்மனி ஒன்றாகி விட்டால்...? பெர்லின் சுவர் சரியும், கிழக்கு ஜேர்மனி கம்யூனிட்ஸ்களின் நெறிப்புப் போக்கும் ஜெர்மனியை ஒன்றாக்கிவிடுமோ என்ற பயம் மேலைநாடுகளுக்கு வந்துவிட்டது.

ஜேர்மனியர்கள் என்ன நினைக்கிறார்கள் ...? ஒன்றுபட்ட ஜேர்மனி ஒரு கனவு அவ்வளவுதான்...

பிரபல ஜேர்மன் எழுத்தாளர் குருந்தர் கிராஸ் சொல்கிறார். கிழக்கும் மேற்கும் நட்புண்டால் போதுமானது. மேற்கத்திய நிதியுதவினை நாடுவதைவிட உண்மையான ஜனநாயக சோஷலிஸம் சாத்தியமானது இதுவரை பதுங்கியிருந்தது இனி பகிரங்கமாக வரவேண்டும் என்பதே என் விருப்பம்.. என்கின்றார்.

இனிய தனிமுறை என்ன சொல்கிறது...? பெர்லின் சுவர் உடைப்பின் நன்றி! (ஜேர்மனியர் கிடக்க) போது பரவசமாக வந்து கொண்டாடிய மானவர் கிரிட்ஷ் சொல்கிறார்: 'நாங்கள் நிறைய பேர் எங்கள் ஊரிலேயே இருக்க விரும்புகிறோம்; உங்கள் ஜனநாயகத்தையும், எங்கள் சோஷலிஸத்தையும் இணைத்து உண்மையான மகிழ்ச்சியை அடைய முடியும் என்று நம்புகிறோம்..." (ஜேர்மனியர் கிடக்க) வந்து கொண்டிருந்தனர். [ம]

கோப்பாய் - மானிப்பாய் பாடசாலை தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

அச்சுவேலி, பெப். 6

மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலக பிராந்தியத்தில் உள்ள கோப்பாய்-மானிப்பாய் தொகுதி பாடசாலை மாணவர்களிடையே தமிழ்த்தினப் போட்டிகள் இராமநாதன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றன.

நான்கு பிரிவுகளாக நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம்:-

முதலாம்பிரிவு வாசிப்பு போட்டி:- 1 ஆம் இடம் செ. தர்சினி உடுவில் மகளிர் கல்லூரி; 2 ஆம் இடம் வி. திவ்வியா கோப்பாய் சரவணபவானந்தா; 3 ஆம் இடம் ப. ஜெனித்தா உரும்பிராய் கொத்தணி; 4 ஆம் இடம் ச. இராமநாதன் நீர்வேலிக் கொத்தணி.

முதலாம்பிரிவு எழுத்துப் போட்டி:- 1 ஆம் இடம் கு. மோகனன் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்; 2 ஆம் இடம் தெ. அனுஷ்சியா அச்சுவேலி திரேசாள் மகளிர் கல்லூரி; 3 ஆம் இடம் ப. உத்தமி உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்.

முதலாம்பிரிவு ஆக்கம்:- 1 ஆம் இடம் தா. பிரியதர்சினி உடுவில் மகளிர் கல்லூரி; 2 ஆம் இடம் க. காயத்திரி உரும்பிராய் கொத்தணி; 3 ஆம் இடம் ச. மயூரன் மானிப்பாய் சித்திய பாரதி வித்தியாலயம்.

முதலாம்பிரிவு பாடுதல் போட்டி:- 1 ஆம் இடம் வி. திவ்வியா கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்; 2 ஆம் இடம் நா. அனித்தா தாவடி இந்துதமிழ்க்கலவன் பாடசாலை; 3 ஆம் இடம் இ. பற்றீசன் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

இரண்டாம்பிரிவு வாசிப்பு போட்டி:- 1 ஆம் இடம் ப. கோசலி உடுவில் மகளிர் கல்லூரி; 2 ஆம் இடம் செ. சவிமிதா மானிப்பாய் மகளிர்கல்லூரி; 3 ஆம் இடம் ப. மலர்விழி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

இரண்டாம்பிரிவு எழுத்துப் போட்டி:- 1 ஆம் இடம் க. நந்தாரோபி உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்; 2 ஆம் இடம் க. செந்தூர்ச்செல்வி ராசா கோப்பாய் மகாவித்தியாலயம்; 3 ஆம் இடம் சி. தாமகுமாரி அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

இரண்டாம்பிரிவு ஆக்கம்:- 1 ஆம் இடம் உ. சிவகாமி உடுவில் மகளிர்கல்லூரி; 2 ஆம் இடம் ம. இலட்சுமி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி; 3 ஆம் இடம் பா. சித்திரா கந்தரோடை தமிழ்க் கத்தையா வித்தியாலயம்.

இரண்டாம்பிரிவு பாடுதல் போட்டி:- 1 ஆம் இடம் ப. ஜெயக்தோ அச்சுவேலி புனித திரேசாள் மகளிர்கல்லூரி; 2 ஆம் இடம் கி. கவிதா புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி; 3 ஆம் இடம் ம. சுனித்திரா ஏழாலை சைவமகா வித்தியாலயம்.

மூன்றாம்பிரிவு கட்டுரைப் போட்டி: 1 ஆம் இடம் ப. ராஜ்சுரேஷ் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம். 2 ஆம் இடம் அ. ஜெயராஜ் சிங்கம் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, 3 ஆம் இடம் இ. பத்மாவதி தாவரவத்தை விக்கினேஸ்வரவித்தியாலயம்.

மூன்றாம் பிரிவு ஆக்கம்: சிறுகதைப் போட்டி: 1 ஆம் இடம் மானிப்பாய் இந்துக் கல்லூரி, 2 ஆம் இடம் தி. மதிமோகனா கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி. 3 ஆம் இடம் ம. ஞானமகிழ்தினி உடுவில் மகளிர் கல்லூரி.

மூன்றாம் பிரிவு பேச்சுப் போட்டி: 1 ஆம் இடம் யோ. சுஜிதா சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, 2 ஆம் இடம் இ. மைதிலி உடுவில் மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் யோ. கெனரீஸ்வரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

நான்காம் பிரிவு கட்டுரைப் போட்டி: 1 ஆம் இடம் க. பிரேமலதா அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் அ. மோகனா ஏழாலைக் கொத்தணி 3 ஆம் இடம் க. வேல்ராஜன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, க. மகேஸ்வரி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

நான்காம் பிரிவு நாடகப் பிரதிகள்: 1 ஆம் இடம் நா. ரஞ்சனி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை, 2 இடம் க. ஜகந்தினி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. 3 ஆம் இடம் பு. குகனேஸ்வரி அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

நான்காம் பிரிவு பாடுதல் போட்டி; 1 ஆம் இடம் மா. சூரியகுமாரி மானிப்பாய் மகளிர் கல்லூரி 2 ஆம் இடம் எஸ். கிரேஸினி உடுவில் இராமநாதன் கல்லூரி, 3ஆம் இடம் சி. துஷ்யந்தினி உடுவில் மகளிர் கல்லூரி.

நான்காம் பிரிவு பேச்சுப் போட்டி; 1 ஆம் இடம் கு. நந்தாரோபி உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்; 2ஆம் இடம் சி. சுஜிதா சோமஸ்கந்தா கல்லூரி, 2ஆம் இடம் வ. தயாவதி அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலயம். 3 ஆம் இடம் ந. நவசோதிநாதன் இணுவில் சைவப்பிரகாசவித்தியாலயம்.

திறந்தவெளி நிகழ்ச்சிகள்

கவிதையாக்கம்: 1 ஆம் இடம் செ. அந்தோனியம்மா அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் இ. சிவசோதி கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம், 3 ஆம் இடம் அ. நிக்ஸன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

சிறுகதை எழுதும் போட்டி: 1ஆம் இடம் ந. [illegible] மானிப்பாய் இந்துக் கல்லூரி. 2 ஆம் இடம் சி. ஜெயசெளரி உடுவில் மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் சி. தயாளினி புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி.

இலக்கிய நாடகம்: 1 ஆம் இடம் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் வயாவிளான் ரோ. க. 3ஆம் இடம் நீர்வேலிக் கொத்தணி.

கவிதை நாடகம்: 1 ஆம் இடம் சுன்னாகம் கொத்தணி, 2 ஆம் இடம் உடுவில் மகளிர் கல்லூரி, 3ஆம் இடம் ஏழாலைக் கொத்தணி.

சமூகநாடகம்: 1 ஆம் இடம் உடுவில் இராமநாதன் கல்லூரி, 2 ஆம் இடம் உரும்பிராய்க் கொத்தணி, 3ஆம் இடம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

விவாதம்: கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரி.

உங்களுக்கு தெரியுமா?: 1 ஆம் இடம் மானிப்பாய் இந்துக்கல்லூரி, 2 ஆம் இடம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, 3 ஆம் இடம் மயிலணி சைவ வித்தியாலயம்.

(ச-11)

தெருவிளக்கு

பச்சிலைப்பள்ளி பெப் 6

சாவகச்சேரி நகர்ப் பகுதியிலுள்ள தெரு மின் விளக்குகள் அனைத்தையும் சிறுப் விளக்குகளாக மாற்றுவதற்கு நகரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது. (இ-117)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

G. A. Q

(வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்)

1991 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

A/L இல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் அனுமதிகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்: 09-02-1990

விபரங்களை நேரில் / தபாலில்

திருமதி S. அருள்நங்கை,
புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(C/3763)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரகாலச்சட்டம் ரத்தாக வேண்டும்; விடுதலையாக நெல்சன் மண்டேலா நிபந்தனை!

ஜோஹன்னஸ்பேர்க், பெப். 5

ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்வது சம்பந்தமான பிரச்சினையில் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்படாத பட்சத்தில் தான் சிறையை விட்டு வெளியேறப் போவது இல்லை என்று திரு நெல்சன் மண்டேலா அறிவித்திருப்பதே இத்திருப்பத்திற்குக் காரணம் என்று அறியக் கிடக்கிறது.

தேசிய ஆபிரிக்கக் காங்கிரஸ்மீதான தடையை தென் ஆபிரிக்க அரசு நீக்கியது. அதனைத் தொடர்ந்து மண்டேலா எந்த நேரமும் விடுதலை செய்யப்படலாம் என்று சொல்லப்பட்டது.

ஆனால் அவசரகாலச்சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது. அதனையும் நீக்கி விட்டு தன்னை விடுதலை செய்தால் மட்டுமே தான் சிறையை விட்டு வெளியேறப் போவதாக நெல்சன் மண்டேலா அறிவித்திருப்பது அவரது விடுதலையைத் தாமதப்படுத்தும் என்று அரசியல் வட்டாரங்களில் சொல்லப்படுகிறது

ஆயுதப் போராட்டம் தொடரும்

தென் ஆபிரிக்க அரசு அண்மையில் நீக்கியது. அதனைத் தொடர்ந்து மண்டேலா எந்த நேரமும் விடுதலை செய்யப்படலாம் என்று சொல்லப்பட்டது.

ஆனால் அவசரகாலச்சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது. அதனையும் நீக்கி விட்டு தன்னை விடுதலை செய்தால் மட்டுமே தான் சிறையை விட்டு வெளியேறப் போவதாக நெல்சன் மண்டேலா அறிவித்திருப்பது அவரது விடுதலையைத் தாமதப்படுத்தும் என்று அரசியல் வட்டாரங்களில் சொல்லப்படுகிறது

ஆயுதப் போராட்டம் தொடரும்

தென் ஆபிரிக்க அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் தீவிரமாக்கப்பட வேண்டும் என்று தென் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்திருக்கிறார்.

ஜோஹன்னஸ்பேர்க்கில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியபோது இத்தகவலை அவரது மனைவி திருமதி வின்னி மண்டேலா வெளியிட்டார்.

தென் ஆபிரிக்க அரசு மண்டேலாவை விடுதலை செய்யும் சாத்தியக் கூறுகள் அதிகரித்து வரும் இச்சந்தர்ப்பத்தில் இத்தகவல் வெளியாகி இருக்கிறது.

நிறவேற்றுமைக் கொள்கை விஷயத்தில் தென் ஆபிரிக்க அரசு சலுகை காட்ட முன் வந்திருப்பதை வெள்ளை இனத்தவரின் உண்மையான மனமாற்றமாகக் கருதிவிடக் கூடாது என்று திரு. நெல்சன் மண்டேலா தெரிவித்திருக்கிறார்.

சர்வதேசரீதியிலானதும் உள்ளூர் அரசியல் வாதிகளினதும் நெருக்குதல் காரணமாகவே தென் ஆபிரிக்க அரசு தனது நிறவேற்றுமைக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

வெள்ளை இனத்தவருக்கு எதிரான கறுப்பு இன மக்களின் ஆயுதப் போராட்டம் கைவிடப்படக்கூடாது. தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்பதில் திரு. நெல்சன் மண்டேலா உறுதியாக இருக்கிறார்.

இப்படி திருமதி வின்னி மண்டேலா தெரிவித்தார்

விடுதலை

நக்ஸலைட் தீவிரவாதிகள் உட்பட வன்கமறியலில் உள்ள சகல அரசியல் கைதிகளையும் விடுவிக்கப்போவதாக ஆந்திர மாநில முதலமைச்சர் சென்னாரெட்டி நேற்று அறிவித்தார். (எ)

நெல்சன் மண்டேலா தம்பதிகள்

ருசி பார்க்கும் நவீன கருவி

பழம் இனிப்பாக இருக்கிறதா? என்பதை ருசி பார்க்கும் கருவி ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

பழம் நன்றாகப் பழுத்து இருக்கிறதா? இனிப்பாக இருக்குமா? என்பதைத் தெரிந்துகொள்ள, அதைக் கையில் எடுத்துப் பார்க்கவோ, தோலை உரித்துப் பார்க்கவோ தேவையில்லை.

இதைப் பரிசோதிக்க டோர்ச்லைட் போன்ற இந்தக் கருவியை பழத்தின் மீது கருஞ்சிவப்பு ஒளியைப் பாய்ச்சுகிறது.

குறிப்பிட்ட பழம் அல்லது காய்கறி இந்தச் சிவப்பு ஒளியை எந்தளவு உள்வாங்கிக் கொள்கிறது என்பதை வைத்து அந்தப் பழம் கனிந்துள்ளதா, இனிப்பாக இருக்குமா? காய்கறி பக்குவமானதா? என்று கண்டறியப்படுகிறது.

இந்த சோதனைக்கு ஒரு விநாடி நேரமே தான் ஆகிறது. (எ)

மூகமூடி மனிதர்கள் நடத்திய தாக்குதலில் 8 இஸ்ரேலியர் பலி!

கெய்ரோ, பெப் 5

முகமூடித் துப்பாக்கி மனிதர்கள் நேற்று இஸ்ரேலிய பயணிகள் சென்ற பஸ் ஒன்றின் மீது கிரனேட்டுக்களை வீசியும் கூட்டும் தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவத்தில் எட்டு இஸ்ரவேலியர்கள் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர்.

இஸ்ரவேலில் இருந்து எகிப்து தலைநகர் கெய்ரோ நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸில் இத்தாக்குதலுக்கு உள்ளானது.

கார் ஒன்றில் சென்ற முகமூடி மனிதர்கள் பஸ்ஸை மறித்து. அதில் எகிப்திய பிரஜைகளை இறங்கச் செய்தனர். பின்னர் பஸ்மீது கிரனேட்டுக்களை வீசினர். துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

இத்தாக்குதலை தொடர்பாக எகிப்து ஜனாதிபதி முபாரக் இஸ்ரேலிய பிரதமர் ஷாமீருடன் தொலைபேசியில் பேசினார். தனது வருத்தத்தை தெரிவித்த ஜனாதிபதி முபாரக் இத்தாக்குதலை துரோகத்தனமான செயல் என்றும் கண்டித்தார். (எ)

நிக்கரகுவா நிலைப்பாடு

மனாகுவா, பெப் 5

அமெரிக்காவுடன் நல்லுறவை வளர்க்க விரும்புவதாக நிக்கரகுவா அதிபர் அறிவித்திருக்கிறார்.

காஷ்மீர் அரசியலில் இருந்து பரூக் அப்துல்லா ஓய்வு!

ஸ்ரீநகர், பெப். 5

அரசியலிலிருந்து ஓய்வுபெறுவதாக ஜம்மு – காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா அறிவித்திருக்கிறார்.

முதலமைச்சர் பதவியை

புதிய துணைவேந்தர்

சிதம்பரம் பெப் 5

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தராக திரு. டி. மோகன் பதவி ஏற்றிருக்கின்றார்.

இவர் இப்பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்துறை பேராசிரியராகவும், கலைத் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். (எ)

பாண்டிச்சேரி சட்டசபை தேர்தல்

பாண்டிச்சேரி, பெப். 5

பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தல் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறுகிறது.

முப்பது தொகுதிகளிலும் தி.மு.க – ஜனதாதள் கூட்டணியும் அ.தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் கூட்டணியும் போட்டியிடுகின்றன.

வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 5லட்சத்து 85 ஆயிரத்து 175 ஆகும். இவர்களில் ஆண்கள் 3 லட்சத்து 2240; பெண்கள் 2 லட்சத்து 83 ஆயிரத்து 935. (எ)

காஷ்மீர் பிரச்சினையில் கன்யாகுமரி வரை மக்கள் ஆதரவுஉண்டு என்று சிங் முழக்கம்

சென்னை, பெப் 5

காஷ்மீர் விஷயத்தில் தலையிடும் வெளிநாட்டுச் சக்திகளுக்கு தகுந்த பாடம் படிப்பிக்க இந்தியா தயாராக இருக்கிறது;

இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப்சிங் திருவனந்தபுரத்தில் நடந்த கொதுக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. வி. பி. சிங் மேலும் சொன்னதாவது:

காஷ்மீர் மாநிலத்தில் வெளிநாட்டுச் சக்திகள் தலையிடமாட்டா என்று நம்புகின்றேன். அப்படித் தலையிடுசெய்யின் அச்சக்திகளுக்குத் தகுந்த பாடம் படிப்பிக்கப்படும்.

இதுவிஷயத்தில் கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை வாழும் 80 கோடி மக்களும் எமது அரசுக்கு ஆதரவளிப்பர் என்பது திண்ணம்

பதவிக்கு வந்ததன் பின்னர், பாகிஸ்தான் உட்பட ஏனைய அயல் நாடுகளுடன் நட்புறவு பேணும் நடவக்கைகளை தேசிய முன்னணி அரசு எடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால் பாகிஸ்தானின் நடவடிக்கைகள் எமது முயற்சிக்குக் குந்தகம் விளைவிப்பதாக அமைந்துள்ளன.

இப்போதாவது பாகிஸ்தான் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, நட்புறவை வளர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

இப்படி பிரதமர் சிங் தெரிவித்தார்.

குஜ்ரால் நம்பிக்கை

காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் விவேகமாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர் குமார் குஜ்ரால் தெரிவித்திருக்கிறார்.

"இப்பிரச்சினையில் இந்தியாவுடனுக மோதலை பாகிஸ்தான் தவிர்த்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கின்றன்.

"காஷ்மீர் பிரச்சினை குறித்து அமெரிக்காவும் ரஷ்யாவும் இந்தியாவுக்குச் சாதகமாக கருத்துக்கள் வெளிவிட்டுள்ளன.

"இந்தியா, தனது அயல் நாடுகளுடன் நட்புறவை வளர்க்கவே விரும்புகிறது. அதன் கருத்து. இந்தியா தனது ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றைப் பயமாக வைத்து அல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படி திரு. குஜ்ராள் தெரிவித்தார்.

ஐ. நாவில் கண்டனம்

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு முக்கூட்டத்தில் காஷ்மீர் பிரச்சினையை எழுப்பப் பாகிஸ்தான் எடுத்த முயற்சிக்கு இந்தியா பலத்த கண்டனம் தெரிவித்திருக்கிறது.

ஜெனிவாவில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவிற்கான இந்தியப் பிரதிநிதி கமலேஷ் சர்மா, இந்தியாவின் கண்டனத்தை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தார்.

காஷ்மீர், இந்தியாவிடமிருந்து பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதி என்று திரு சர்மா தெரிவித்தார்.

இதேவேளை, ஐ நாவில் உள்ள இந்தியப் பிரதிநிதி திரு. கனிகான், ஐ நா பொதுச் செயலாளரைச் சந்தித்து காஷ்மீர் பிரச்சினை பற்றிய முழுவிவரங்களையும் வெளியிட்டார். (எ)

விஸா வழங்குவதில்

பிரிட்டனின் புதிய கட்டுப்பாடு; இலங்கை மாணவர் பாதிப்பு!

லண்டன், பெப். 5

பிரிட்டனின் புதிய குடிவரவுச் சட்டத்தினால் இலங்கையர் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

விருந்தாளி என்று கூறி விஸா எடுத்துச் சென்றவர்கள் பிரிட்டன் சென்றடைந்ததும் விஸாவில் கூறப்பட்டுள்ள 'விருந்தாளி' அந்தஸ்துக்குப் பதிலாக 'மாணவர்' என்று மாற்றும் படி கோரி வந்தனர்.

புதிய குடிவரவுச் சட்டம் இப்படி அந்தஸ்தை (Status) மாற்றுவதைத் தடை செய்கிறது.

இதன் காரணமாக 'விருந்தாளி' என்று கூறி எடுக்கப்பட்ட விஸா காலாவதியானவுடன் தாயகத்திற்கு திரும்பும்படி அவர்களை பிரிட்டிஷ் அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் அங்கம் வகிக்காத நாடுகளில் இருந்து 'விருந்தாளி' என்று விஸாவுடன் சென்று பின்னர் 'மாணவர்' என்று மாற்றிக்கொள்ளும் முறைகேடைத் தடுக்கும் முயற்சியாக பிரிட்டனின் புதிய குடிவரவுச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

'மாணவர்' என்று கூறி விஸா எடுப்பவர்கள், அதனை தங்களின் தாயகத்தில் உள்ள பிரிட்டிஷ் விஸா அலுவலகத்திலேயே உரிய தஸ்தாவேஜுகளைக் காட்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் அறிவுறுத்துள்ளனர்.

புதிய சட்டவிதிகள் 1989 ஜூலைக்கு பின்னர் பிரிட்டன் சென்றவர்களுக்கு பொருந்தாது.

இதுவிடையில் (Visitor) 'விருந்தாளி' விஸாவில் பிரிட்டன் செல்பவர்கள் ஆகக் கூடியது ஆறு மாதங்கள் மட்டுமே அங்கு தாங்கியிருக்க முடியும். அதற்கு மேல் கால நீடிப்பு வழங்கப்படமாட்டாது என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது. (எ)

தொழிற் கட்சிக்கு பெருகும் ஆதரவு

லண்டன், பெப். 5

பிரிட்டனில் தொழிற் கட்சிக்கு ஆதரவு அதிகரித்து வருவதாக டெய்லிரெலிகிராப் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பின் மூலம் தெரிய வந்துள்ளது.

ஆளும் கன்சேர்வேட்டிவ் கட்சிக்கு 32.5 சதவீதமும் தொழிற்கட்சிக்கு 48 சதவீத ஆதரவும் கருத்துக் கணிப்பில் கிடைத்தது. (எ)

ரஜ்னீஷ் சுவாமி மரணத்தில் மர்மம்; கொலை என அமெ. சீடர் தகவல்

பூனா, பெப் 5

ரஜ்னீஷ் சுவாமி ஒதிரியக்க விஷம் பாய்ச்சப்பட்டதன் காரணமாகவே உயிரிழந்தார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த மாதம் 19ஆம் திகதி மகாராஷ்டிர மாநிலத்தில் பூனா நகரில் ரஜ்னீஷ் சுவாமி மரணமடைந்தார் என்பது தெரிந்ததே.

58 வயதான அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அதனால் அவர் உயிர் பிரிந்தார் என்று செய்திகள் வெளியாகின.

இப்போது ரஜ்னீஷ் சுவாமியின் சீடரும் அமெரிக்க வழக்கறிஞருமான சுவாமி நரேன் என்பவர், ரஜ்னீஷ் கதிரியக்க விஷம் உடலில் செலுத்தப்பட்டதன் காரணமாக மரணமடைந்தார் என்று தெரிவித்திருக்கிறார்.

சுவாமி நரேன் செய்தியாளர்களிடம் சொன்னதாவது:

அமெரிக்காவில் சிறை வைக்கப்பட்டிருந்தபோது அவரது உடலில் கதிரியக்கம் உள்ள விஷம் (தாலியம்) செலுத்தப்பட்டது. அதன் விளைவாகவே ரஜ்னீஷ் மரணமானார்.

அமெரிக்கச் சிறையில் அவரது உடலில் தாலியம் செலுத்தம்பட்டதற்கான ஆதாரங்களை நாம் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். இது குறித்து அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவோம்.

இவ்வாறு சுவாமி நரேன் சொன்னார்.

இதுவிடையில், ரஜ்னீஷ் சுவாமியின் டாக்டர் கம் கருகோ வைத்திய அறிக்கை ஒன்றை பூனா ஆச்சிரமத்தில் பக்தர்கள் முன்னிலையில் படித்தார்.

டாக்டர் அறிக்கை

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது:

அமெரிக்க சிறையில் வைத்து தனது உடலில் தாலியம் செலுத்தப்பட்டதை பகவான் உறுதி செய்தார். தாலியம் செலுத்தப்பட்டதில் இருந்தே இந்த உடலில் வாழ்வது நரகவேதனையாக உள்ளது என்றும் சுவாமி சொன்னார்.

இப்படி வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

விமான நிலையங்களுக்கு அண்ணா, காமராஜ் பெயர்கள்

சென்னை, பெப் 05

சென்னையில் உள்ள தேசிய மற்றும் சர்வதேச விமான நிலையங்களுக்கு காமராஜ், அண்ணா ஆகியோரின் பெயர்கள் சூட்டப்படவுள்ளன.

இது சம்பந்தமாக தமிழ் நாடு முதலமைச்சர் கருணாநிதி விடுத்த வேண்டுகோளை பிரதமர் திரு. வி. பி. சிங் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அண்ணா நினைவுதினக் கூட்டத்தில் வைத்து திரு. கருணாநிதி இந்த வேண்டுகோளை பிரதமருக்கு விடுத்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் திரு. வி. பி. சிங் கோரிக்கையை ஏற்று பெயர் மாற்றத்துக்கு உத்தரவிட்டார். (உ-ன)

● போபர்ஸ் பீரங்கி பேர ஊழல்

ராஜீவ்காந்தி மீது விசாரணை புலனாய்வுத்துறையினர் தகவல்!

புதுடில்லி, பெப் 5

போபர்ஸ் பீரங்கி ஊழல் குற்றச்சாட்டின் மீது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மீதும் விசாரணை நடத்தப்படும் என்று மத்திய புலனாய்வுத்துறை இயக்குநர் திரு. ராஜேந்தர்சேகர் அறிவித்திருக்கிறார்.

கவிடன் நாட்டில் உள்ள போபர்ஸ் நிறுவனத்திடம் இருந்து இந்திய இராணுவத்துக்கு பீரங்கிகள் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது தெரிந்ததே.

ராஜீவ் அரசு இந்த ஊழலில் சிடுபட்டிருந்ததாகவும் இந்தியப் பணத்தில் 64கோடி ரூபா லஞ்சமாகப் பெற்றதாகவும் புகார் கூறப்பட்டிருக்கிறது.

தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து, மத்திய புலனாய்வுத் துறை புதுடில்லி நீதிமன்றத்தில் 14 பேர் மீது குற்றஞ்சாட்டி முதல் அறிக்கையைச் சமர்ப்பித்த மாதம் 23 ஆம் திகதி தாக்கல் செய்தது.

போபர்ஸ் முன்னாள் தலைவர் மார்ட்டின் ஆர்டபோ, இந்தியத் தொழில் அதிபர்களான வின்சட்டா, இந்துஜா ஆகியோர் இதில் அடங்குவர்.

இது குறித்து மத்திய புலனாய்வுத்துறை இயக்குநர் ராஜேந்தர்சேகர் செய்தியாளர்களிடம் விவரம் வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது:

போபர்ஸ் நிறுவனத்தை நிர்ப்பந்திக்கும்படி தெரிவிக்கப்பட்ட யோசனையை அப்போது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி ஏற்கவில்லை.

இது ஏன் என்பது குறித்து விசாரணை நடத்தப்படும். எனவேதான் ராஜீவ் காந்தி மீது விசாரணை நடத்தப்படவிருக்கிறது: தேவைப்பட்டால் மேலும் சில அரசியல் வாதிகள் மற்றும் தனி நபர்களிடமும் விசாரணை நடத்தப்படும்.

இப்படி அவர் சொன்னார். (எ)

90 A/L

விஞ்ஞான மாணவர்களுக்கு

மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்:

10 - 02 - 1990 Sat & Sun

12.30 — 1.30	PHY	Mr. மணியம் B.Sc
1.30 — 2.30	ZOO	Mr. ஈசன் B.Sc
2.30 — 3.30	PHY	Mr. ரவீந்திரநாதன் B.Sc
3.30 — 4.30	GHE	Mr. நாகரட்னம் B.Sc
4.30 — 5.30	BOT	Mr. சிவவீரசிங்கம் B.Sc

3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(C/3778)

கம்யூனிஸ்ட் அரசுக்கு எதிரான கிழக்கு ஐரோப்பிய அலை சோவியத்திலும் வீசுகிறது!

மாஸ்கோ, பெப் 5

பல அரசியல் கட்சிகள் பங்கு பற்றும் தேர்தலை நடத்தக்கூடிய விதத்தில் தீவிர அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டுவர சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தயாராகி வருகிறது

இன்று திங்கள் ஆரம்பமான மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இது சம்பந்தமான யோசனைகளை ஜனாதிபதி கோர்பச்சேவ் முன்வைக்க உள்ளார்.

அந்த யோசனைகளில் சில வருமாறு:

★ சோவியத் உயர்பீடத் தலைவைப் பீடத்தில் மாற்றம் கொண்டு வருவது.

★ அரசகிமையில் கம்யூனிஸ்ட் கட்சி வகிக்கும் ஏகபோக உரிமையை ஒழிப்பது;

★ சோவியத் யூனியனில் உள்ள பதினைந்து மாநிலங்களில் இயங்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு கூடுதல் சுயாட்சி உரிமைகளை வழங்குவது.

கடந்த ஆண்டு நடந்த சோவியத் நாடாளுமன்றக் கூட்டத்தில் பல கட்சி அரசியல் முறையை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. அப்போது ஜனாதிபதி கோர்பச்சேவ் அதனை வன்மையாக எதிர்த்தார்;

'தற்போது கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் அரசுகள் மக்களின் எதிர்ப்புக் காரணமாக பதவி துறந்து விட்டன; இந்த அவலங்களை எதிராக சோவியத் யூனியன் தாக்குப் பிடிக்க முடியாது; ஆகவே பல கட்சி அரசியல் முறையை கொண்டு வருவது தவிர்க்க முடியாததாகி விட்டது' என்ற ஜனாதிபதி கோர்பச்சேவ் தற்போது கருத்து வெளியிட்டிருக்கிறார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்பு சேவையில் பரிட்சையமான வர்களின் நவீன ஸ்தாபனம்!
★ எம்பாமிங் ★ பிரேதப்பெட்டிகள்
ஊர்வல வாகனங்கள் சேவையில்
★
பிறைற் ஹவுஸ்
[யாகப்பர் ஆலய அருகில்]
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

6 02 1990 செவ்வாய்க்கிழமை

குழிக்குள் பிரேதம் இறக்கும் இயந்திரம்,
'டிவைஸ்', ஒப்பின் காஸ்கற்ஸ்,
குறஸ் காஸ்கற்ஸ், மலர் வளையங்கள்
★
பிறைற் ஹவுஸ்
[யாகப்பர் ஆலய அருகில்]
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம் பெப்: 06

"கடந்த இரண்டு வருடங்களின் பின் கடந்த இரண்டொரு தினங்களாக யாழ் நகரப் பகுதியில் சுதந்திரமான முறையில் சுவரொட்டிகள் ஒட்டக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது, இவ் வகையில் முதலில் சுவரொட்டிகளை பல்கலைக்கழக மாணவர்களே ஒட்டியுள்ளனர்.

யாழ்- பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது;

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்தவருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இராணுவ வாகனங்களில் சென்று கொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் பல்கலைக்கழக நுழைவாயிலை அண்மித்ததும் திடீரென வாகனங்களை நிறுத்தி விட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் பல மாணவர்களையும் கடுமையாகத் தாக்கினர்.

இச்சம்பவத்தைக் கண்டித்தும் மாணவரது உரிமை பல்கலைக்கழக எல்லையிலுள்ளாவது பேணப்படவேண்டுமெனவும் கோரி யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் 2-2-89 காலை 9-30 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் சகோதரியின் பாதையில் வீதிவழிமறிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இப் போராட்டத்தைக் கலைப்பதற்கென்று விசேஷ இராணுவ வாகனங்களில் வந்தோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இரண்டு மாணவர்கள் மரணமாகினதுடன் மேலும் பதினொரு மாணவர்கள் காயங்களுக்கும் ஆளாகினர்;

மேற்படி போராட்டத்தில் மாணித்த கின்னத்தம்பி ஜெகநாதன் (விஞ்ஞான பீடம்), தனபாலசிங்கம் சத்தியேந்திரா (கருத்துவ பீடம்) ஆகிய இரு மாணவர்களினதும் ஒராண்டு நினைவஞ்சலிச் சுவரொட்டியே யாழ் நகர்ப் பகுதிகளிலும் வாகனங்களிலும் ஒட்டப்பட்டுள்ளது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

ஆசிரிய இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், பெப்; 6

யாழ்ப்பாண மாவட்டத்தக்கு 12 ஆசிரியர்களும், யாழ் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு 18 ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்;

மாகாண கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட இவ்விடமாற்றம் தொடர்பான பட்டியல் யாழ்; கல்வித் திணைக்களத்துக்கு வந்துசேர்ந்துள்ளது;

யாழ் மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றவர்கள் விவரம் வருமாறு:-

சங்கைக்குரிய சகோதரி மரிய கொரட்டி (கிளிநொச்சி), எஸ். ஜயம்பிள்ளை (கிளிநொச்சி), எஸ். விஸ்வலிங்கம் (வவுனியா), ஆர். பிரான்ஜேந்திரா (வவுனியா), திருமதி எஸ். சிவானந்தன் (வவுனியா), திருமதி எம். கிஷோரவேல் (திருமலை), கே. குலசபாநாதன் (திருமலை), செல்வி ஜி. திருநாவுக்கரசு, (மன்னார்), திருமதி எல். எஸ். கதிர்காமர் (மன்னார்), செல்வி ஜ. எஸ். பஸ்தியாம்பிள்ளை (முல்லைத்தீவு), திருமதி வி. எம். புஹாரி (மட்டக்களப்பு), எஸ். இளையதம்பி (மட்டக்களப்பு), எஸ். எஸ். எம். அசாம் (மட்டக்களப்பு), திருமதி எம். ஈ. ஜோசேப் (மட்டக்களப்பு), திருமதி பி. அருள் அன்னராஜா (மட்டக்களப்பு), பி. யோகேந்திரன் (கல்முனை), திருமதி மனோரஞ்சிதம் சபாரத்தினம் (கல்முனை) திருமதி வி. இரத்தினராஜா (அம்பாறை);

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றவர்களின் விவரம் 'வருமாறு:

எஸ். இராசரத்தினம், ஆ. புவனேந்திரன், திருமதி எஸ். விமலாதேவி, திருமதி. எம். மகேந்திரராஜா, ரி. பாலகிருஷ்ணன், எஸ். கிறிஸ்ரிர் காமநாதன், செல்வி. ஜி சின்னத்தம்பி, செல்வி. ஆறுமுகம் யோகேஸ்வரி, செல்வி எஸ் சின்னத்தம்பி, எம். சண்முகநாதன், திருமதி. குலராணி இராஸலிங்கம், ஏ. தம்பிப்பிள்ளை. (உ-3)

இரத்த தான நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப் 6

யாழ் - இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு காரணமாக யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெறஏற்பாடாகிஇருந்த இரத்ததான நிகழ்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது;

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணமான பல்கலை மாணவர்களான சத்தியேந்திரா ஜெகநாதன் ஆகியோரின் ஓராண்டு நினைவுக்காக மாணவர்கள் நேற்று இரத்ததானம் செய்யவிருந்தனர்;

எனினும் நேற்று பல்கலைக் கழக மாணவர் அவையினரால் கலைபீட கலையரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவுக் கூட்டம் திட்டமிட்டபடி நடைபெற்றது (உ 3)

காங்கேசனில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது;

அதே இடத்தைச் சேர்ந்த கனகரட்ணம் சுந்தரலிங்கம் (வயது 18) என்பவர் இச்சம்பவத்தில் காயமுற்றார்.

(உ-9)

தவறிவிட்டது

யாழ்ப்பாணம் — காங்கேசன்துறை மினிவாரில் பனாலி நோக்கி வருகையில் திருநெல்வேலிக்கும் — உரும்பராய்க்கும் இடையில் நேற்று இயந்திரப்பாகங்கள் அடங்கிய பெட்டி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர் பின்வரும் முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கோல்ட்ஸ் இன்டஸ்ரி
அரச வீதி,
(கற்பகப் பிள்ளையார் கோவில் சமீபமாக)
உரும்பராய்.

(2245)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, இல:292/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 02 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இந்தியப் பிரதேசத்தினுள் புக பாக். கலகக்காரர்கள் முயற்சி!

பாரதப்படையினர் சுட்டதில் 10 பேர் காயம்

புதுடில்லி பெப்: 6

நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடத்திய சுமார் 4 ஆயிரம் பாகிஸ்தானியர்கள் சர்வதேச எல்லையைக் கடந்து இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீருக்குள் பிரவேசிக்க முனைந்தனர்.

அப்போது இந்திய எல்லைப் புறப் பாதுகாப்புப்படையினர் சுட்டதில் சுமார் 10 பாகிஸ்தானியர் காயமடைந்தனர்;

அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் காயமடைந்தவர்களை எடுத்துக்கொண்டு பாகிஸ்தான் பிரதேசத்துக்குள் திரும்பி விட்டனர்;

பாகிஸ்தானியர்கள் கோஷ்டி இந்திய எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினர் என்றும் செய்திகள் தெரிவித்தன;

மாதகல் கடலில் வைத்து 4 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, பெப்: 6

தமிழ் இளைஞர்கள் நால்வர் 22லட்சம் ரூபா பெறுமதிக்குச் சமமான அமெரிக்க டாலர்களை இலங்கைக்குள் கடத்த எடுத்த முயற்சி கடற்படையினரால் முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது;

இந்தியாவில் இருந்து வந்த ஒரு தோணியில் வந்த நான்கு இளைஞர்களையும் மாதகலுக்கு 4 மைல் தொலைவில் வைத்து காரைநகர் கடற்படையினர் கைதுசெய்ததாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன

'எரிசாரா' என்ற படகில் ரோந்து சென்ற கடற்படை அதிகாரிகளே கடத்தல் முயற்சியை முறியடித்ததாகவும் அறிவிக்கப்பட்டது. இக்கடத்தல் முறியடிப்பு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (உ)

யாழ் விஜயம்

யாழ்ப்பாணம், பெப் 6

உலக தரிசன இயக்கத்தின் (வேர்ல்ட் விஷன்) இயக்குநர் பீற்றர் பெரி நேற்று யாழ் நகருக்கு விஜயம் மேற்கொண்டார்.

இயக்கத்தின் பல்வேறு பட்ட திட்டங்களையும் அவர் பார்வையிட்டார்; (உ-3)

உழுந்து விலை

யாழ்ப்பாணம்; பெப் 6

வவுனியா, முல்லைத்தீவு விவசாயிகளின் நன்மை கருதி ஒரு கிலோ உழுந்து 10 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கமநல சேவை நிலையங்கள், நோ கூ சங்கங்கள் இந்த விலைக்கு கொள்வனவு செய்யும் என்று விவசாயப் பகுதி அதிகாரி தெரிவித்தார்.

கடந்த ஆறு வருடங்களுக்குப் பின் கூடுதலான அளவு உழுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளதால் இவ்விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று தெரியவந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1800 மெற்றிக் தொன்னும் வவுனியா மாவட்டத்தில் 5000 மெற்றிக் தொன்னும் உழுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது; (இ-3)

400 விக்கெட்டுக்களை வீழ்த்தி றிச்சர்ட் ஹட்லி சாதனை!

கிறிஸ்சேர்ச், பெப். 9

நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர் றிச்சர்ட் ஹட்லி (வயது 38) டெஸ்ட் சரித்திரத்தில் 400 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதலாவது பந்து வீச்சாளர் என்ற சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்.

கிறிஸ்சேர்ச்சில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்டின் போது கடந்த ஞாயிறன்று இந்தச் சாதனையை அவர் எட்டிப் பிடித்தார்.

தாம் விளையாடிய 80 டெஸ்ட் ஆட்டங்களுக்குள்ளேயே 400 விக்கெட் சாதனையை அவர் எட்டிப் பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கது; (உ)

இரு ஆண்டுகளாக——

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்று அதன் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கூறியிருக்கிறார்;

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கையெழுத்திடு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட பிரகாரம் எந்த அதிகாரத்தையும் ராஜீவ் அரசினால் வடக்கு, கிழக்கு மாநிலத்துக்குப் பெற்றுத்தர முடியவில்லை. அவரே 1989 டிசம்பர் 31 இற்கு முன்னர் அமைதிப்படை முழுவதுமாக வாபஸாகிவிடும் என்று கூறி அமைதிப்படையை விலக்கத் தொடங்கினார்; கடந்த 3, 4 மாதங்களுக்கு மேலாகவே படை வாபஸாகத் தொடங்கி விட்டது.

இப்போது தேசிய முன்னணி அரசு மேலும் இரண்டு மாதம் கழித்து படைவாபஸ் என்று கூறி உள்ளது.

இரண்டு ஆண்டு நிறாத அதிகாரத்தை இருமாதத்தில் பெறுவது கஷ்டம்தான் இருந்தாலும் தேசிய முன்னணி அரசு அதற்கான முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

விடுதலைப்புலிகள் உண்மை நிலையை விளக்குவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு வசதி இல்லை. இந்திய அமைதிப் படையை பொறுத்த வரை ஏற்கனவே அவர்கள் மீது கொண்டுள்ள போரம் தணிந்ததாகத் தெரியவில்லை, அதனால் இந்தியாவுக்கு சரியாகச் செய்திகள் வந்து சேருவதில்லை, ஏற்கனவே செய்யப்பட்ட சில தவறுகளுக்கு நியாயம் தேடுகிற முயற்சியில் ஒரு சில அதிகாரிகள் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்து;

இராமேஸ்வரத்தில் வயர்லெஸ் கருவிகளுடன் சிலரை பொலீஸார் பிடித்துள்ளனர். ஆயுதங்கள் புதைக்கப்பட்டதற்கும் இவர்களுக்கும் தொடர்பு உண்டு என்று சொல்லப்படுகிறது; (இ-9)

சுதுமலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோவிலடியில் இருந்தே இந்திய 'ஹெலி' மூலம் புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் 03-8-87 அன்று, அதே மைதானத்திலேயே இந்தியப் படையினர் திரு. பிரபாகரனை கொண்டுவந்து விட்டனர்.

அடுத்த நாள் 4 ஆம் திகதி, சுதுமலை அம்மன் கோவில் மைதானத்திலேயே சரித்திரப் பிரசித்தி பெற்ற பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

இப்போது நடக்கவிருக்கும் சுதுமலைக் கூட்டத்திற்கான திகதி விரைவில் நிர்ணயிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது; (உ-2)

நகரப்பகுதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருடிவருவதாக சொல்லப்படுகிறது;

இந்தத் திருட்டுகள் காரணமாக தொடர்ந்து தொலைபேசிகளை இயங்கச் செய்வதிலும் மேலதிக இணைப்புகளை வழங்குவதிலும் [illegible] எதிர்நோக்கவேண்டியுள்ள [illegible] தாக கூறப்படுகிறது; (இ-9)

மாதகலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] மேலும் சொன்னார்; (உ-எ)

கணிப்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இயங்கத் தொடங்கியதைத் தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் பழைய அலுவலகத்திற்குச் சென்று பார்த்தனர். அப்போதே அங்கு வைக்கப்பட்டிருந்த பதிவுப் பிரதிகள் நனைந்து நாசமாகிப் போன திடுக்கிடும் விவரம் தெரிய வந்தது!

இதே வேளை பழைய பூங்கா அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த காணிப் பதிவுப் புத்தகங்கள் 500ம் காணாமற்போன விவரமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; அங்கிருந்த சில புத்தகங்கள் எரிந்த நிலையில் உள்ளதும் தெரிய வந்தது; (உ-3)

வடக்கு கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நோய்க்கான தடை ஊசி மருந்து காலநடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது; தடையூசி ஏற்றல் சம்பந்தமான மேலதிக விவரங்களை சகல மாவட்டக் கோட்டங்களிலுள்ள காலநடை வைத்தியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

—இவ்வாறு அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; (உ-9)

மரண அறிவித்தல்கள்

செல்லையா விசுவரத்தினம்

(Retired Head Master, Black wood Estate's School)

கோப்பாய் செற்கைச் சேர்ந்த காலம் சென்றவர்களான தம்பாப்பிள்ளை செல்லையா திருமதி உத்தமிப்பிள்ளை செல்லையா தம்பதிகளின் மகனு, ஆரூ பிராவைச் சேர்ந்த காலம் சென்றவர்களான ஐயாத்துரை நடராசா, திருமதி தங்கம்மா நடராசா தம்திரளின் மூத்த மருமகனும் தங்கராணியின் அன்புக்கணவருமாகிய செல்லையா விசுவரத்தினம் ஞாயிற்றுக்கிழமை காலமானார்; இவர் மகாதேவன் (Teacher, Tamil Vidhiyalayam Kotmale), திருமகேஸ்வரி அழகேந்திரன் ஆகியோரின் அன்புத் சகோதரரும், சுதாஸ் (Canada) சுமதி, ரமேஸ் (England) பிரதீஸ் (Switzerland), சுதீஸ் ஆகியோரின் அருமைத் தந்தையும் காலம்சென்ற அழகேந்திரன், அற்புதானந்தராசா (Switzerland), ஸ்ரீரங்கராசா, ஜெயலோகராசா (Switzerland), இந்திரானந்தராசா (Switzerland) திருமதி வசந்தராணி செல்ரிராஜன் (Australia), திருமதி செல்வராணி மகாதேவன், திருமதி சோதிராணி சதானந்தராஜ் (France) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று உரும்பராய் வேம்படி மயானத்தில் தகனம் செய்யப்படும்;

தகவல்:
சகோதரர் செ மகாதேவன்

(2436)

நயினாதீவு வேலாயுதம் சபாரெத்தினம்

நயினாதீவு வேலாயுதம் சபாரெத்தினம் அவர்கள், (கணக்காளர்) K. K. A. K. ஆலய தர்மகர்த்தா, யாழ்ப்பாணம் காலமானார் அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் -வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் கெங்காதேவியின் அருமைக் கணவரும், சுபாநந்தினி, செந்கையாழினி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற நல்லையா வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மருமகனும் முத்தம்மா, செல்லம்மா, பரமநாதன், லோகாம்பிகை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரருமாவார். ஈமக்கிரிகைகள் நயினாதீவில் செவ்வாய்க்கிழமை பி. ப: 2 மணியளவில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மனைவி, மக்கள்

நயினாதீவு 5A (C/3358)

திருமதி ஈஸ்வரி வடிவேலு

திருமதி ஈஸ்வரி வடிவேலு காலமானார்.

இவர் இளைப்பாறிய நீர்ப்பாசன ஓவசியர் சி. க. வடிவேலுவின் அன்பு மனைவியும், திருமதி சோதிதேவி சச்சிதானந்தன், திரு வ. நாகேந்திரன் (வைத்திலிங்கம் அன் கொம்பனி, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு சோ சச்சிதானந்தன், திருமதி நாகேந்திரன் வசந்தகோகிலம் ஆகியோரின் மாமியாரும், காலம் சென்ற சங்கானையைச் சேர்ந்த கனகசபாபதியின் அன்புச் சகோதரியும், கட்டுடையைச் சேர்ந்த காலம் சென்றவர்களான தம்பையா, கா. சிவசம்பு, தேவராசா மற்றும் மெய்யானமூர்த்தி, திருமதி பூரணத்தினம், திருமதி லட்சுமியம்மா ஆகியோரின் மைத்துனியும், லவாணிதேவி, வதாங்கனி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவர்

ஈமக்கிரியைகள் இன்று காலை 10-30 மணியளவில் மீசாலையில் நடைபெறும், சகலரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. K. வடிவேலு

மீசாலை (2444)

சின்னத்தம்பி ஆறுமுகம்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த வில்லப் பிரமகுலத்தவர் சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்கள் சிவபதமடைந்துள்ளார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் புஸ்பராணி, சிவானந்தன் (ஜேர்மனி) செல்வராசா (ஜேர்மனி) புவிபலதா (கிறீஸ்தவக் கல்லூரி கோப்பாய்) ஆகியோரின் அருமைத் தந்தையும் நா. சோதிலிங்கத்தின் அன்பு மாமனாரும், மோகனதாஸ், யசோதா, கவிதா, தனுதாஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 06 - 02 - 90 நண்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: நா. சோதிலிங்கம்

கோப்பாய் வடக்கு, கோப்பாய் (2344)

திரு. ஆறுமுகம் மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மீசாலை வடக்கு வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியரும், மேற்படி வித்தியாலயத்தின் ஆசிரியை அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், லோகஜனனி, கிருபாமூர்த்தி, கிருபாகரன், கிருபாகரன் (சமூகசேவைகள் அலுவலர், கிளிநொச்சி), வரதஜனனி (இராமநாதன் அக்கடமி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆகிய திரு மயில்வாகனம் நேற்று (5-2-90) திங்கள் காலை சிவபதம் அடைந்துவிட்டார்.

ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு மீசாலை வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, வேம்பிராய் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்;

மனைவி, பிள்ளைகள்

மீசாலை வடக்கு,
புத்தூர் வீதி, 5-2-90; (2443)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org